
உ
சிவமயம்













யாழ்ப்பாணம் - பண்ணாகம்

அமரர்.

# திரு. மா. சிவரத்தினம்

அவர்களின்

# ஞாபக மலர்

(மாணவர்கள் பயன்பெறக்கூடியது)

05-10-2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் - பண்ணாகத்தை
பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும்
உயர் சைவ வேளாண் குலமரபில் தோன்றியவரும்

அமரர்களான
மாணிக்கம் தவமணி தம்பதிகளின்
ஏகபுத்திரனும்

அன்னாரின் அன்பு மைத்துணியான
சுதந்திராதேவியின் அன்புக் கணவருமாகிய

# அமரர். மா. சிவரத்தினம் (தவராசா)

[இளைப்பாறிய இ.போ.ச. நடத்துனர்]

அவர்களின்

வானுலக வாழ்வின் நினைவாக வெளியிடப்பெற்ற

# ஞாபக மலர்

05-10-2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமர்ப்பணம்



அன்பு காட்டி அரவணைத்து வளர்த்தெடுத்து

எம்மை அவனிதனில் நல் மனிதனாக்கியும்

உற்றாருக்கும் உறவினர்க்கும் உறுதுணையாய்

ஊராம் நாலில் ஓங்கி ஒலிக்கு முதல்வனாய்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டி

இன்று . . . . . . . . . . . .

எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து

வானுலக வாழ்வில் பிரவேசித்துள்ள எங்கள்

அன்புத் தெய்வத்தின் பொற்பாதங்களில்

இவ் ஞாபகமலரை இதய சுத்தியுடன் சூட்டி

கண்ணீரை காணிக்கையாக

சமர்ப்பணம் செய்கின்றோம்.



என்றென்றும் அன்பகலா

மனைவி, மக்கள்,

மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



தோற்றம்
15-09-1943

மறைவு
05-09-2011

அமரர்.

# திரு. மாணிக்கம் சிவரத்தினம்

(இளைப்பாறிய இ. போ. ச. நடத்துனர்)

அவர்களின்

திதி வெண்பா

ஆண்டு கரவான ஆவணியில் பூண்டதொரு
பூர்வபக்க நவமித் திதிதனில் - நீண்டபுகழ்
மாணிக்கம் தவமணி தம்பதியரின் ஏகபுத்திரன்
சிவரத்தினம் விசவத்தனையான் திருப்பாதம் சென்றாரென்றறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் மாணிக்கம் சிவரத்தினம் (தவராசா) அவர்களின் வாழ்க்கை வரலாறு

இந்து சமுத்திரத்தின் மத்தியிலே அமைந்திருக்கும் எழில்மிகு நாடான சுவர்ணபூமி என அழைக்கப்படும் ஈழமணித் திருநாட்டின் வடபாலில் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தின் வலிமேற்கு பிரதேசத்தில் உள்ள சுழிபுரம் தன்னில் பண்பாளர்கள் பல நிறைந்த பண்ணாகம் எனும் கிராமத்தில் மாணிக்கம் தவமணி தம்பதியினரின் இல்வாழ்க்கையின் பயனாக 1943.09.15 இல் சிவரத்தினம் பிறந்தார். இவரின் அன்புச் சகோதரியாக யோகமலரும் 1946இல் பிறந்தார் குடும்ப வாழ்க்கை சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் சிவரத்தினம் அவர்களுக்கு 2½ வயது நிரம்பிய சந்தர்ப்பத்தில் குடும்பத்தின் ஆணிவேராகிய தந்தையார் மாணிக்கம் திடீர் என மறைந்தார்.

சிறுவயது முதலே தந்தை முகம் பாராது தாயின் அரவணைப்பிலும் அம்மம்மாவின் கவனிப்பிலும் பல கஷ்டங்கள், இன்னல்கள் மத்தியில் வாழ்க்கை நடாத்தி வந்தார். இவர் சிறு வயதிலிருந்தே துடிப்புடனும் தாயின் பாசப்பிணைப்பிலும் சகோதரியின் உதவியுடனும் இளமைக்காலத்தை கழித்து வந்தார்.

ஆரம்பக் கல்வியை பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்திலும் ஐந்தாம் வகுப்பிலிருந்து O/L வரை விற்றோரியாக் கல்லூரியிலும் பயின்றார். பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் கணித பாடத்தில் முதன்மை பெற்று விளங்கினார். மேலும் படிப்பைத் தொடர அவரின் குடும்பச் சூழல் இடம்தராததால் தாயுடன் இணைந்து பட்டை கட்டி இறைத்து விவசாயம் செய்து தமது வாழ்க்கையை நடாத்திச் சென்றார்.

இறைவனின் அருளினால் 1965இல் இலங்கை போக்குவரத்து சபையின் நடத்துனராக தெரிவு செய்யப்பட்டு தமது முதல் பணியை பருத்தித்துறையில் ஆரம்பித்தார். இவர் தனது பணியில் நேர்மையுடனும் விவேகத்துடனும் நடந்து கொண்டதுடன் எதையும் தட்டிக்கேட்கும் சுபாபமும் கொண்டவர். சக ஊழியர்களுக்கு பிரச்சினை என்றால் முன்நின்று நீதி கேட்பார் இதனால் பருத்தித்துறையை சேர்ந்த C.T.B நிர்வாக ஊழியர்கள் இவரை "மருமகன்" என்று அழைத்தார்கள்.

இவர் அரச பணியில் இருந்தாலும் சமூகத்தையும் குடும்பத்தையும் கவனிக்க தவறுவதில்லை. தனது சகோதரி யாகிய யோகமலருக்கு அவ் ஊரைச் சேர்ந்த பேரின்பம் அவர்களுக்கும் அக்கால முறைப்படி 1970ஆம் ஆண்டு நள்ளிரவில் திருமணம் செய்துவைத்தார். தாயின் ஆணையின்படி கைலாயபிள்ளை அன்னலட்சுமி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரி யாகிய சுதந்திராதேவி அவர்களை 1971-01-19ஆம் திகதி இல்லறத்தில் இணைத்துக்கொண்டு சிவராணி, சிவகாந்தன், ஜெயகாந்தன், யுவகாந்தன் என்ற மக்கட் செல்வங்களைப் பெற்று இனிமையாக வாழ்க்கையை கொண்டு நடாத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரியாரின் பூரண ஒத்துழைப்புடன் பொது வாழ்வில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டார். எடுத்துக்காட்டாக எமது ஊர் குல தெய்வமாகிய விசவத்தனை முருகமூர்த்தி கோவிலின் தீர்த்தக் கேணியை திருத்தியமைப்பதற்கான நிதியை பெறுவதற்கு தனது தோழர்களுடன் இணைந்து சிறிஅம்பாள் நாடகமன்றம் என்ற அமைப்பை நிறுவி அவற்றின் மூலம் வாழ்வதற்கு வழிசெய், அழாதவர்கள் யார், அவன் போட்ட கணக்கு, மாறாதோ உன்மனது, புத்த நந்தனார் போன்ற பல நாடகங்களை நடாத்தி அவற்றின் மூலம் பெற்ற பணத்தினைக் கொண்டு தீர்த்தக்கேணியை புணரமைப்புச்செய்ய உறுதுணையாக இருந்தார்.

பண்ணாகம் சிறிமுருகன் சனசமூக சேவா வாலிப சங்கத்திற்கான நிலையான கட்டடம் அமைப்பதற்கு தன்னையே முழுமையாக அர்ப்பணித்து செயற்பட்டார். மேலும் பண்ணாகம் அண்ணாகலை மன்றத்தின் தோற்றத்திற்கு பங்களிப்பு செய்ததுடன் பல எதிர்ப்புக்களின் மத்தியிலும் வழக்கம்பரை முத்துமாரியம்மன் முன்றலில் மோகனரங்கு கட்டுவதற்கு தன்னையே அர்ப்பணித்தார்.

எமது குலதெய்வமாகிய விசவத்தனை முருகன் ஆலயத்தின் மகோற்சவ காலத்தில் வழங்குவதற்காக ஒரு கட்டிடம் தேவை என்பதை உணர்ந்து சமூகத்தாருடன் இணைந்து சிறிமுருகன் அன்னதான சபையை கட்டுவதற்கு அரும்பாடுபட்டார்.

மேலும் பண்ணாகம் தெற்கு ஐக்கிய நாணயசங்கம் அமைப்பதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி அங்கத்தவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக்கையை அதிகரிக்க அரும்பாடுபட்டதுடன் அங்கத்தவர் மரணமடையும் போது அதற்காக மரண சகாயம் வழங்குவதற்கு உதவிபுரிந்தார் இதுதொடர்பாக சங்க பொதுக்கூட்டத்தில் தீர்மானமும் கொண்டு வந்தார்.

வழக்கம்பரை முத்துமாரி அம்மன்பால் ஈடுபாடு கொண்டு ஆலய சூழலை அழகுபடுத்துவதற்கு பல மரங்களை நடுவதற்கு உறுதுணையாக நின்று செயற்பட்டதுடன் தொண்டர் சபையினர் மூலமாக மகோற்சவ காலத்தில் அன்னதானம் வழங்குவதற்கு புதிய அன்னதான மடத்தை ஏற்படுத்திக் கொடுத்தார்.

பண்ணாகம் கிராம முன்னேற்றச்சங்கம், விசவத்தனை பரிபாலசபை, முத்துமாரி அம்மன் பரிபாலன சபை, மூளாய் கூட்டுறவு சபை போன்ற பல அமைப்புக்களிலிருந்து அவற்றின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார்.

சமூகப்பணி மட்டுமல்லாது குடும்பத்தின் மீது அதிக அக்கறை கொண்டு பாரியாரின் ஒத்துழைப்புடன் பிள்ளைகளை ஒழுக்க சீலர்களாக வளர்த்ததுடன் சமூகத்துடன் ஒன்றி வாழ்வதற்கும் சமூக பணிசெய்வதற்கும் தூண்டினார். பிள்ளைகள் விரும்பிய பொருட்களை வழங்குவதிலும் கஷ்டம் பாராது செயற்பட்டார். போராட்ட காலத்தில் குடும்பத்தாரை கண்ணும் கருத்துமாக பேணிக்காத்து அவர்கள் உயருவதற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்ததுடன். அவர்களை உரிய காலத்தில் இல்லற வாழ்க்கையிலும் ஈடுபடுத்தினார்.

தனது தாயை இறுதிக்காலம் வரை பாரியாரின் துணையுடன் நன்கு கவனித்து வந்ததுடன் அவருக்கான சகல பணிவிடைகளையும் செய்தார். மேலும் தனது தாயை 1989ஆம் ஆண்டு இழந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரியாரின் சகோதர சகோதரிகளையும் தன்னுடைய சகோதார, சகோதரிகளாக எண்ணி அவர்களின் உயர்வுக்கு பாடுபட்டதுடன் அவர்களுக்கும் நல்வாழ்கை ஏற்படுத்திக் கொ்டுத்தார். சமூகத்தில் உள்ள அனைவருக்கும் பரிச்சயப் பட்டவர். மங்கள, அமங்கள நிகழ்வுகளை முன்னின்று நடாத்தவதில் திறமையானவர். எவ்வித கோப தாபம் பாராமல் அனைவரையும் பண்பாளன், உத்தமன், தனது உறவினர்களின் நல்வாழ்வுக்கு அத்திவாரம் ஏற்படுத்தி வைத்தார்.

சமூகத்தில் உத்தமராய் வாழ்ந்த இவர் தமது பிள்ளைகளின் இல்லற வாழ்வை திறம்பட நடாத்தி ஜெகதீஸ்வரன், நிறஞ்சினி, கிரிசாந்தினி, புஸ்பலதா என்ற மருமக்களையும் பெற்று நிதுஷா, நிபிவிதா, ராகுலன், சர்மிலன், ஷேவிதன் போன்ற பேரப்பிள்ளைகளையும் கண்டார்.

2008ஆம் ஆண்டளவில் இவருக்கு ஏற்பட்ட பக்கவாத நோய் இவரின் செயற்பாடுகளுக்கு தடை ஏற்படுத்தினாலும் தன் முயற்சியால் இயன்றளவு மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் சுமையாக இருக்காமல் தன் வேலையை செய்து கொண்டு வந்தார். 2011 எட்டாம் மாதமளவில் செயற்பாடுகள் படிப்படியாக குறையத்தொடங்க குடும்பத்தார், உறவினர்கள் ஏங்கித்துடிக்க 2011-09-02 படுக்கையில் இந்த இவர் 2011-09-05 மாலை 3.46 மணிக்கு அவர் இன்னுயிர் பிரிந்தது. என்னே காலனின் கொடுமை! ஓடியோடி பணியாற்றினாரே! விதி யாரைத்தான் விட்டது. தான் பிறந்த சமூகத்திற்கும், குடும்பத்திற்கும், புகுந்த குடும்பத்திற்கும் எவ்வளவு உதவிகளைச் செய்து உயர்வை கண்டு மகிழ்ந்தார்.அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

***ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கலுரை



**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**

**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"**

என்ற திருக்குறளுக்கமைய வாழ்ந்தவர்களில் அமரர் சிவரத்தினம் அவர்களும் ஒருவராவார். இவரது உயர்ந்த பண்பும், அன்போடு பழகும் தன்மையும், மற்றவர்களுக்கு தன்னால் இயன்றவரை உதவ வேண்டும் என்ற உயர்ந்த எண்ணமும், எடுத்த கடமையை துணிவோடும், உறுதியோடும், தெய்வ நம்பிக்கையோடும், தனது வாழ்நாளில் கடைப்பிடித்து சிறப்பாக வாழ்ந்து காட்டியவர் அமரர் சிவரத்தின மாவார்.

மேற்குறிப்பிட்ட சிறந்த பண்புகளால் வலிமேற்கிலுள்ள ஆலயங்களில் நிர்வாக உறுப்பினராகவும், கூட்டுறவுச்சங்கங் களிலும், வேறு பல அமைப்புக்களிலும், அங்கத்தவராக இருந்து சிறந்த ஆக்கபூர்வமான கடமைகள் செய்ததினால், அந்திம கிரிகையன்று அவருக்கு அளித்த அஞ்சலி உரைகளும், கண்ணீர் அஞ்சலிகளுகம், ஓர் உன்னதமான உதாரணமாகும். எப்படியும் வாழலாமென்றில்லாமல், இப்படித்தான் வாழ வேண்டுமென எடுத்துக்காட்டிய பெருந்தகை அமரர் சிவரத்தினம் ஆவார்.

அமரர் அவர்களை நான் யா/ பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலை முதல் வழக்கம்பரை அம்பாள் ஆலய பரிபாலன சபையில் அங்கத்தவராக இருக்கும் வரை அன்போடு பழகியவர். அம்பாளுக்கு சிறிய சிங்கவாகனம் வேண்டுமென அடியேனின் வேண்டுகோளை நிறைவேற்றியவர். தாகசாந்தி மண்டபத்தை புனரமைத்து தமது முன்னோர்களின் தர்மத்தை தொடர்ந்தும் நிலைநாட்டிய பெருந்தகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கார் தகவிலர் என்பது எச்சத்தால் காணம்பாடும் என்பதற்கமைய, அன்னாரின் பிள்ளைகள் கல்வி அறிவோடும், பண்போடும், ஆசிரியராகவும், சிறைச்சாலை அதிகாரியாகவும், வெளிநாடுகளிலும், சமூக சேவைகளிலும், சிறப்பாக சேவை செய்வது அமரர் செய்த தர்மங்களே.

யார் உதவியுமின்றி ஒருதாய் வயிற்றிற் தனியாகப் பிறந்து வாழ்ந்து உடலை விட்டு உயிர் தனியாகப் பிரிந்து சென்று ஆண்டவர் பாதமடைவது எல்லாம் தனிமையே, இதற்கிடைப்பட்டது தான் மனைவி, பிள்ளைகள் என்ற பாசத்தொடர் இதுதான் வாழ்க்கை.

எனவே அமரர் அவர்களின் ஆத்மா சாந்தியடைய தொல்புரம் வழக்கம்பரை அம்மாளாச்சியைப் பிரார்த்திப்போமாக.

*சிவஸ்ரீ. சு. சுந்தரராஜக்குருக்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவையே பெரிதென வாழ்ந்த சீமான்

அன்பர் சிவரத்தினம் அவர்களின் ஆன்மா அவர் உடலில் இருந்து சென்ற செய்தியைப் பத்திரிகை மூலமறிந்து ஒரு கணம் மனம் பேதலித்து நின்றேன். சிறிது நேரத்தில் ஒரு மனத்தெளிவு ஏற்பட்டது. பிறப்பு எப்பொழுது ஏற்பட்டதோ அன்றே மரணமும் நிச்சயிக்கப்பட்டு விட்டது. இவை இரண்டுக்குமிடையே உள்ள காலம்தான் முக்கியமானது. சிறுபராயத்தில், வாலிப மிடுக்குடன் இளைஞனான காலத்தில், குடும்பஸ்தனாக, வயோதிப காலத்தில் ஒருவன் என்ன செய்தான் என்பதுதான் முக்கியமான விடயம். எமது அன்பரைப் பொறுத்தவரை தன்னலம் கருதாது, பலனை எதிர்பாராமல் அனைத்து மக்களுக்கும் சேவை செய்வதையே தனது இலட்சியமாகக் கொண்டவர் என்பதை எல்லோரும் ஏற்பார்கள் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை, மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதை நன்கு உணர்ந்து செயலாற்றியவர்.

சுருங்கக் கூறின் ஊரிலே இவர் பங்கு பற்றி உதவி செய்யாத எந்த நிகழ்ச்சியும் இல்லை.

இதேபோன்று விசவத்தனை முருகனிலும் வழக்கம்பரை அம்பாளிடத்திலும் மிகுந்த ஈடுபாடு உடையவர். அங்கு நடைபெற்ற உற்சவங்களில் உதவி செய்ததுடன் இவ்விரு ஆலயங்களிலும் மிகச் சிறந்த முறையில் அன்னதானம் செய்து அடியார்களின் பசிப்பணியைத் தீர்த்து மனம் குளிர வைத்தவர்.

புன்முறுவலுடன் சாந்தமான முகம் எவரையும் தன்பால் ஈர்க்கும் சக்தி உடையவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் சேவைகளினால் மனம் குளிர்ந்த வள்ளி தேவசேனா சமேத விசவத்தனை முருகன் இவருக்கு திருவருள் புரிந்து தன் பாதாரவிந்தங்களில் சேர்த்துக்கொண்டு விட்டான்.



தத்தளித்துக் கொண்டிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து மனதை தேற்றி அவர் காட்டிய வழியில் நின்று சேவை செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**22 (70), பிறவுன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**05-09-2011**

**ந. பத்மநாப சர்மா**
**முன்னாள் முருகன் அர்ச்சகர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவையின் சிகரம் எங்கள் சிவரத்தினம்

பண்ணாகத்தில் பிறந்து வளர்ந்து, வாழ்ந்து இப்போது அமரத்துவம் அடைந்த திருவாளர் மாணிக்கம் சிவரத்தினம் அவர்கள் எங்கள் கிராமத்தில் உள்ள சங்கங்கள், சபைகள், மன்றங்கள் யாவற்றிலும் பலவகைப் பொறுப்புக்களையும் வகித்து சேவையாற்றிய சேவையாளன் தமது வாழ்வின் பிற்காலத்தில் எங்கள் ஆலய பரிபாலான சபையில் தர்மகர்த்தா சபை அங்கத்தவராகச் சேர்ந்து பலவகையிலும் ஒத்துளைப்பு வழங்கி வந்தவர்.

இவர் பட்டம், பதவி, புகழ் ஆகியவற்றிற்காக பாடுபட்டவர் அல்லர் பொது வாழ்வில் சகல துறைகளிலும் பொதுச்சேவையே நோக்கமாகக் கொண்டு செயற்பட்டவர் தனிப்பட்ட வாழ்விலும் ஊரவர், உற்றார், உறவினர் என எல்லோர் வீட்டிலும் நடைபெறுகின்ற மங்கல, அமங்கல வைபவங்களில் செய்ய வேண்டிய கிரியைகளுக்குரிய ஆயத்தங்களையும் அவை சிறப்புற நடைபெறுவதற்கு இறுதிவரை முன்னின்று பாடுபடும் பெரியவர் ஆவார்.

இவர் செய்த தன்னலமற்ற சேவையின் பயனாகத்தான் இவரது குடும்பம் சிறப்புற விளங்குமல்ல எங்கள் கிராமத்திற்கும் பெரும் இழப்பாகும். இவரைப்போன்ற தன்னலமற்ற சேவையாளரை இப்புவியில் காண்பது மிக மிகக் கடினமானது. மண்ணில் பிறந்த யாவரும் ஒருநாள் இறப்பது திண்ணம் என்பது இயற்கையின் நியதியாகும். அவரின் இழப்பையிட்டு நாம் அனைவரும் வருந்து வதிலிருந்து அவர் போல சேவையாளனாக வாழ்ந்து காட்டுவதே அவருக்கு செய்யும் மரியாதையாகும்.

அன்'னாரது ஆத்மா எல்லாம் வல்ல எங்கள் விசவத்தனை வேலவனின் பாதார விந்தங்களை சென்றடைய அவனருள் வேண்டி பிரார்த்திப்போமாக.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**பண்ணாகம்**
**விசவத்தனை முருகமூர்த்தி கோவில்**
**பரிபாலன சபையினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக சேவையாளர் தவராசா

திருவாளர் மாணிக்கம் சிவரத்தினம் அவர்கள் எமது மன்றத்தின் மேற்கோள் ஆகிய "கடமை கண்ணியம் கட்டுப்பாடு" என்பதனை தமது வாழ்நாளில் கைக்கொண்டு சமூக சேவையுடன் தமது உறவினர்களின் வீடுகளில் நடைபெறும் வைபவங்களில் முன்னின்று செயற்படுத்தி அவ் வைபவத்தை திறம்பட நடத்தி வைக்கும் ஆற்றல் கொண்டவர். இதனால் உறவினர்கள் எல்லோரும் அன்பாக "ராசா" என்று அழைத்து அவரைத் தங்கள் வைபவங்களில் முன்னிலைப்படுத்துவார்கள்.

அமரர் அவர்கள் எமது மன்றத்தின் ஆரம்பகாலம் முதல் இன்றுவரை மன்றத்தின் செயற்பாடுகளில் பங்குபற்றி மன்ற வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தார். இவர் மன்றத்தின் நிர்வாகத்தில் பெருளாளர், துறை இயக்குனர், அதிகாரசபை அங்கத்தவர் போன்ற பலதரப்பட்ட பதவிகளை வகித்தார். இவர் பொருளாளராக இருந்த காலத்தில் எமது மன்றத்தின் ஸ்தாபக அங்கத்தவருள் ஒருவரான அமரர் தா. மோகனநாவுக்கரசு அவர்களின் ஞாபகார்த்தமாக இப்பகுதியில் ஒரு திறந்தவெளி அரங்கு இல்லாத குறையை நிவர்த்தி செய்யும் முகமாகவும் வழக்கம்பரை அம்மன் கோவிலின் வடக்கு வீதியிலே "மோகன் அரங்கு" என்பதனை பொதுமக்களின் உதவியுடன் மன்றத்தின் பேரால் அமைப்பதற்கு முன்னின்று செயற்பட்டார்.

இவர் தமது இளமைக்காலத்திலே வழக்கம்பரை அம்பாள் நாடக மன்றம் என்ற அமைப்பை கலாபூசணம் திரு. இ. கிருஸ்ணதுரை அவர்களுடன் மற்றும் தொல்புரத்திலுள்ள அக்கால இளைஞர்களுடன் சேர்ந்து உருவாக்கினார். இந்நாடக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றம் மூலம் தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்தியதுடன் நாடகம் மூலம் நிதிசேகரித்து பல பொதுப்பணிகள் செய்தனர். அந்தவகையில் எமது குலதெய்வமான விசவத்தனை முருகன் கோவிலின் கேணியை திருத்தி அமைக்க முன்னின்று உழைத்தார்.

எமது ஊரிலுள்ள பல பொது அமைப்புக்களின் நிர்வாகங் களில் அங்கம் வகித்து தனது திறமையான செயற்பாடுகளினால் தனக்கென ஒரு இடம் பிடித்துக்கொண்டார். அந்தவகையில் ஸ்ரீ முருகன் சனசமூக சேவா வாலிபர் சங்கம், பண்ணாகம் ஸ்ரீ முருகன் அன்னதான சபை என்பவற்றுக்கான கட்டிடங்கள் அமைப்பதற்கு முன்னின்று உழைத்தார். அன்னதான சபையின் அன்னதான நிகழ்வுகளில் தனது வீட்டு நிகழ்வு போல லீவு எடுத்து நின்று செயற்படுவார். இவைகளுடன் பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கம், ஸ்ரீ முருகன் இந்து சமய விருத்திச் சங்கம், பண்ணாகம் தெற்கு ஐக்கிய நாணய சங்கம் என்பவற்றில் நிர்வாகத்தை அங்கம் வகித்து பொதுச்சேவை செய்தார்.

இவர் பொதுச்சேவையில் கணக்குகளை ஒழுங்காகவும் திறம்படவும் செய்வதனால் நிர்வாகத்தில் அங்கம் வகிக்காத இடத்து கணக்குப் பரிசோதகராக பொதுச்சபையால் நியமிக்கப் படுவார். இச்சேவையை கண்ணியமாகவும் பொறுப்புடனும் செய்வார்.

இத்துடன் அமரர் அவர்கள் கூட்டுறவுத் துறையில் தமது சேவையை தடம்பதித்து ஒரு கூட்டுறவாளனாக திகழ்ந்தார். அந்தவகையில் முதலில் பண்ணாகம் தெற்கு ஐக்கிய நாணய சங்கத்தில் கூட்டுறவு சேவையினை ஆரம்பித்து பின்னர் தென்கிழக்காசியாவிலேயே முதலில் கூட்டுறவு மூலம் உருவாகி சிறந்த சேவை ஆற்றிய பெருமைகொண்ட மூளாய் கூட்டுறவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியசாலையின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக சேவை செய்தார். அத்துடன் தொல்புரம் ஐக்கிய பரஸ்பர சகாயச் சங்கம் (சாப்பணச் சங்கம்) நிர்வாகத்திலும் சங்கானை ப. நோ. கூ. சங்க கிளை 5 நிர்வாகத்திலும் கிளை 5ன் மூலம் பொதுச்சபை உறுப்பினராகவும் இருந்து கூட்டுறவுத்துறைக்கு அருந்தொண்டாற்றினார்.

பொதுப்பணியுடன் இறைபணியும் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் வழக்கம்பரை முத்துமாரியம்மன் கோயில் தொண்டர் சபையை உருவாக்கி அதன் நிர்வாகத்தில் பலதரப்பட்ட பதவிகளை வகித்தார். இத்துடன் பரிபாலனசபை உறுப்பினராகவும் அங்கம் வகித்தார். இவர் தனது உறவினரான பிள்ளைச்சி அவர்களால் உருவாக்கப்பட்ட மடத்தினை தனது சொந்த முயற்சியில் திருத்தி அமைத்து உதவினார். இம் மண்டபத்தில் திருமணங்களும் நடக்கின்றது. திருவிழாக் காலங்களில் அன்னதானம், தாகசாந்தி செய்யப்பட்டு வருகின்றது.

இவர் ஊர் மக்களுக்கும் ஆற்றிய செயற்கரிய சேவைகளை அவதானித்த மன்றம் 03-12-1994இல் நடைபெற்ற தனது வெள்ளிவிழாவில் இவரது பொதுச் சேவையினை கௌரவிக்கும் முகமாக விருது வழங்கியும் பொன்னாடை போர்த்தியும் பாராட்டப்பட்டார். இதனால் மன்றம் தனக்கும் பெருமையை சேர்த்துக் கொண்டது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எமது குலதெய்வமான விசவத்தனை முருகனையும், வழக்கம்பரை அம்பாளையும் இறைஞ்சுகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**விசவத்தனை முருகன் வீதி,**
**பண்ணாகம்.**

**பண்ணாகம்**
**அண்ணா கலை மன்றம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக சேவையாளன்

திருவாளர் மாணிக்கம் சிவரத்தினம் அவர்கள் பண்ணாகம் தெற்கு ஐக்கிய நாணய சங்கத்தின் நீண்டகால அங்கத்தவர் களில் ஒருவர் ஆவார். இவர் சங்கத்தின் பல நிர்வாக சபைகளில் அங்கம் வகித்ததுடன் பல பதவிகளையும் வகித்துள்ளார்.

அமரர் அவர்கள் சங்கத்தின் கணக்குகளை துல்லியமா கவும் சரியாகவும் பார்ப்பதில் ஒரு வல்லவர். கணக்குகளில் ஏதும் பிழைகள் ஏற்பட்டால் அதனை தனது நேரத்தையும் பொருட்படுத்தாமல் கண்டு படிப்பார் பொது செயற்பாடுகளில் ஈடுபடுவார்.

அமரர் சிவரத்தினம் அவர்கள் சங்கத்தின் பொதுச்சபை அங்கத்தவர்களின் ஒத்துழைப்புடன் மரணசகாயத் திட்டம் என்று ஒரு திட்டத்தினை பொதுக்கூட்டத்தில் சமர்ப்பித்து பொதுச்சபை உறுப்பினர்களின் அங்கீகாரத்துடன் நடைமுறைப்படுத்தினார். இத்திட்டத்தின் மூலம் சங்க அங்கத்தவர்களின் குடும்பத்தினர் பயனடைகின்றனர். இப்படியாக எடுத்த விடயத்தை நிறைவு செய்வதில் வல்லவர்.

இவர் எமது சங்கத்தில் மட்டுமல்லாமல் மூளாய் கூட்றவு ஆஸ்பத்திரியின் பணிப்பாளர் சபையிலும், தொல்புரம் ஐக்கிய பரஸ்பராய சங்கத்தில் (சமர்ப்பணச் சங்கம்) பல பதவிகளை வகித்துள்ளதுடன் சங்கானை ப. நோ. கூட்டுறவுச் சங்கத்தில் பதவிகளை வகித்து நல்ல ஒரு கூட்டுறவாளனாக திகழ்ந்தார்.

இவருடைய மகன் ஜெயகாந்தன் அவர்களும் எமது சங்கத்தில் தற்போது செயலாளர் பணி செய்வதுடன் ஊரில் உள்ள பல அமைப்புக்களில் சேவை செய்கின்றார். தந்தையைப் போல் இவரும் ஒரு சேவையாளனாக திகழ இறைவனை வேண்டுகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எமது குல தெய்வமான விசவத்தனை முருகன் பாதங்களை இறைஞ்சுகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**வீசவத்தனை முருகன் வீதி,**
**பண்ணாகம்.**

**பண்ணாகம் தெற்கு**
**ஐக்கிய நாணய சங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலகவா பழகினோம்

"இசைக்கருவிகள் எத்தனை இருந்தாலும் அவைகளை இசையோடு மீட்டுவதற்கு கரங்கள் வேண்டுமே". எத்தனையோ இளைஞர்கள் இலைமறைகாயாக கலையுணர்வு கொண்டவர்களாக வாழ்ந்த அந்த நாட்களை எண்ணிப் பாக்கும் பொழுது, அந்த கலைஞர்களை சமூகத்தின் முன்னால் இனங்காட்டி வைத்தவர் எங்கள் "தவராசா" என எல்லோராலும் அழைகப்பெறும் எங்கள் தவம்".

"வாழ்வதற்கு வழிசெய்" என்ற சமூக நாடகம் அன்றைய இளைஞர்களால் தயாரிக்கப்பெற்று, விசவத்தனை முருகன் கோவில் கேணித்திருப்பணிக்காக மேடையேற்றப்பெற்று பெரும் புகழ் சேர்த்ததுடன் பல கோவில்கள் கட்டட நிதிகளுக்காக மேடையேற்றும் வாய்ப்பினைப் பெற்றிருந்தது. அந்த நாடகத்தில் பிரதான பாத்திரமாக "காந்தன்" என்ற பாத்திரத்தில் நடித்து புகழ் பெற்றார். அதே "காந்தன்" என்ற பெயர் விருப்பால் தனது ஆண்பிள்ளைகளுக்கு சிவகாந்தன், ஜெயகாந்தன், யுவகாந்தன் என பெயர் வைத்து மகிழ்ந்தார். தன் ஒரே ஒரு மகளுக்கு தன்னுடைய சொந்தப் பெயரான "சிவரத்தினம்" என்பதை சிவராணி என நாமம் சூட்டி அன்புடன் வளர்த்தார்.

எமது ஊரில் உள்ள அனைத்து சங்களிலும், மன்றங் களிலும் பலகாலம் பல பதவிகளை வகித்து பற்பல சேவைகளையும் ஆற்றி வந்துள்ளார். எடுத்த காரியங்களை என்னபாடுபட்டாவது செயல்படுத்திவிடுவார். "மெய்வருத்தம் பாரார்" "கண்துஞ்சார்", "எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்", அவமதிப்பும் கொள்ளார், ""கருமமே கண்ணாயினார்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவம் எனக்கு அண்ணர் முறையாக இருப்பினும் தவம் என்றே அழைப்பேன். என் வாழ்வோடு கிட்டத்தட்ட ஐம்பது வருடங்களாக அவரும் நானும் பல நாடகங்களை நடித்துள்ளோம். அது மட்டுமல்ல பொதுச்சேவைகளிலும் அவருடன் இணைந்து செயல்பட்டிருக்கின்றேன். முற்கோபமும் பின்னிரக்கமும் கொண்ட அவரின் போக்கிலே போனால் பிழைகள் ஏதும் ஏற்படாது என்பதை நன்குணர்ந்தவன் என்பதால் அவர் வழியில் செல்வதில் நான் என்றும் பின் நிற்பதில்லை. அவரிடம் இருந்தது எல்லாம் உண்மை, நேர்மை, பயமின்மை அவர் வாழ்ந்தது அற்புதமான வாழ்க்கை.

இளம் காதலர்கள் ஒருவர் மீது ஒருவர் கொண்ட அன்பின் மிகுதியால் சேர்ந்து வாழ வேண்டும் இல்லையேல் வாழ்வே இல்லை என்று காதல் போராட்ட வாழ்க்கையில் மூழ்கி வேதனையில் மிதந்த போது நான் இருக்கிறேன். என் நண்பர்கள் இருக்கிறார்கள் வாழவைப்போம் கலங்காதீர்கள் "விலகவா பழகினீர்கள்" சேர்த்து வைப்போம் என்று அந்த காதலர்களை ஒன்று சேர்க்க எத்தனையோ முயற்சிகள் எடுத்து பின்னர். வட்டுக்கோட்டை தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினரும், உலகத்தலைவர்களை எல்லாம் சந்தித்து தமிழன் சரித்திரம் தெரியப்படுத்திய தலைவர் அமிர்தலிங்கம் அவர்களும் பாரியாரும் இணைந்து இக்காதல் திருமணம் நடைபெற... "தவமும் எமது நண்பர்களும் எடுத்த முயற்சி" வெற்றி பெற்றது என்றால் இன்று நானும் எனது குடும்பத்தாரும் அவரை... எப்படி... வார்த்தைகளே இல்லை...

சுமார் இருநூறு மேடைகளுக்கு மேல் இன்று மேடை ஏறி நடித்து கதை வசனம், பாடல், இயக்குனர் என்றெல்லாம் பல முகங்களை உருவாக்கி அந்த நிகழ்ச்சிகள் மூலம் பெற்ற விளம்பரங்கள் பரிசு பத்திரங்கள் எல்லாம் சேகரித்து வைத்திருந்து என்னிடம் தந்து வலி மேற்கு பிரதேச சபையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கலைவாரிதி" பட்டமும், இலங்கை அரசினால் கௌரவிக்கப் பெறும் "கலாபூஷணம்" விருதும் பெற என்னை ஊக்குவித்த என் தவம்... மறைக்க... மறக்க முடியுமா...

கலாபூசணவிருது எனக்கு கிடைத்தது என்று சொன்ன போது... அவர் முகம்... அன்றலர்ந்த செந்தாமரையை வென்றது... நினைத்துப் பார்க்கிறேன். எனக்கு விழா எடுக்க முடியவில்லையே என்னால் எதுவும் முடியாதே... தனது உடம்பியலாமையை... கைகளினாலும்... கண்களினாலும்... அதை சொல்ல என்னாலும் முடியவில்லை... என்னைக் கௌரவிக்க வேண்டும் என்ற அவரது ஆவல்... வேகம்... அவரின் அன்பர் என் நண்பர் ஓய்வு பெற்ற மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர்... திரு. காசிப்பிள்ளை துரைசிங்கம் மாஸ்டர் அவர்களின் இரண்டாவது மகன் துரை ரகு அவர்களால் கௌரவிக்கும் நிகழ்வு ஒழுங்கமைக்கப் பெற்றது.

அந்நிகழ்வினை நாம் நாடகம் பழகி பயன்பெற்ற திரு. துரைசிங்கம் ஆசிரியர் அவர்களின் இல்லத்தில்தான் நடாத்த வேண்டும் என்ற ஆவலால் அங்கேயே அக்கௌரவிப்பு நிகழ்வு நடத்த இருந்த சமயம் நடக்க இயலாமல் இருந்த "தவம்" அவர்களை தனது காரில் வீடு சென்று ஏற்றிவந்து அவரையும் அரவணைத்து அவருக்கு மகிழ்வினை ஊட்டிவிட்டார் நண்பன் ரகு. இந்நிகழ்வினை பின் சில நாட்களில் தனது சைகை மூலம் ரகுவிற்கு என்ன செலவு வரும் பொன்னாடை என்ன விலை... இப்படி எல்லாம் கைப்பாசை மூலம் என்னிடம் கேட்டார் நான் அதெல்லாம் ரதுதான் பொறுப்பு என்பேன்... ஒரு பார்வை கதைப்பார்... கைவிரலை நீட்டுவார்... ஏன்... தன்னால் முடியவில்லையே என்ற ஆதங்கம். "படித்தாலும் பட்டம் பெற்றாலும் பாரட்ட வேண்டியது எமது பிள்ளைகளை என்று அடிக்கடி சொல்லும் அவரை.... யார்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாடலை" சீமெந்து வாசிலிலே சப்பாணி போட்டு அமர்ந்திருந்தார்... தவம் நான் பிரான்ஸ் பத்தாம் திகத் பயணம் செய்யப்போகிறேன்..." "தவம்"... ஒரு சிரிப்பு... "எனது வழமையான பகிடி". உனக்கு என்ன வேண்டி வர... என்னைப் பார்த்து சிரித்தாரே ஒரு சிரிப்பு... அது... எது... ஏன் அந்த சிரிப்பு... நினைத்து பார்க்கிறேன் அவர் சிரித்தது போடா மடையா... இது பொல்லாத வாழ்க்கை... நீ வரும்போது... நான்...?

"முட்டை வெளியே உடைந்து விட்டால் மரணம். அதே முட்டை உள்ளே உடைந்தால் அது ஜனனம்" மீண்டும்... தவமாய் பிறப்பாய்".

நீ சாகவில்லை தவம்... நல்ல, நல்ல உள்ளங்களில் எல்லாம் நீ இருப்பாய். இந்த மலர் எனக்கு போதாது அன்பா உனைப்பற்றி எழுத. "ஆறாது ஆறாது அழுதாலும் தீராது ஆனாலும் வழியென்ன"... தவமே...

உனக்கான மலரில் பலர் பல சொல்லி வரிகள் பல எழுதலாம். மலரும் உனக்கான மலர். அதில் எனது இதழ்களும் இணையட்டும்.

உன் பிரிவால் துயருற்று வேதனையடைந்திருக்கும் உம் அன்பு மனைவி பிள்ளைகளுக்கும் எமது ஆறுதலான வார்த்தைகளை சமர்க்கின்றோம். எங்கள் தவர...ராசாவின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். (இன்று தவம் பிறந்த நாள் 15-09-2011)

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

கலாபூஷணம் இ. கிருஷ்ணதுரை
குடும்பம்
பண்ணாகம் (பிரான்ஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவன் போட்ட கணக்கு

வாழ்வதற்கென்று எப்போ பூமியில் பிறந்தோமோ அன்றே மாழ்வதும் உறுதி என்பதை தெரிந்து கொண்டோம் அது தெரிந்தும் கூட.... அறிவு படைத்த மனிதனாக பிறந்தும். மமதை என்பதும் மதம் என்பதும் எமது வாழ்வின் பாதையின் ஊடேவந்து வழிதடுமாறச் செய்கின்றன. இருந்தும் சில மனிதர்கள் எல்லாவேளைகளிலும் ஒரே மாதிரியாக வாழ்ந்து வழிகாட்டி செல்கின்றார்கள் 67 வருடங்கள் இப்பூமியில் வாழ்ந்து பலருக்கு வழிகாட்டியாக திகழ்ந்து நல்லமனத்துடனும் நேர்மையுடன் வாழ்ந்து எனது அருமை நண்பன் தவராசாவின் இழவு செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தேன்.

பல ஆயிரம் மையில்களுக்கப்பால் வாழ்ந்து வரும் நாம் வேதனையடைவதை தவிர வேறு என்ன செய்ய முடியும்... "வாழ்வதற்கு வழி செய்", "விலகவா பழகினோம்" "அவன் போட்ட கணக்கு" அவளா சொன்னாள்" "அண்டல் ஆறுமுகம்", "கொழும்பிலே கோவிந்தர்" "தந்தைக்காக" மாறாதோ உன் மனது" இப்படி எத்தனையோ நாடகங்களில் அவருடன் சேர்ந்து நடித்த நிகழ்வுகள் இன்றும் நினைக்க இனிக்கின்றது. சமூகத் தொண்டனான அவரை சமூகம் கௌரவப்படுத்தி ஏதாவது பண்ணியதா என்பது எனக்கு தெரியவில்லை. இன்னும் பல வருடங்கள் அவர் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்திருக்கலாம். விதி சதி செய்து விட்டது என் செய்வது பிறப்புண்டேல் இறப்பும் உண்டு இது "அவன் போட்ட கணக்கு"

அவர் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவர் குடும்பத்தாரின் துயரிலும் பங்குடையவனாகின்றேன்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

து. தனேசன்

(டென்மார்க்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசத்தின் உறைவிடம்

எங்கள் அன்பான அத்தான் இவ்வளவு சீக்கிரம் எங்களைத் தவிக்கவிட்டுப் போவீர்கள் என்று நினைக்கவில்லை. எனக்குத் திருமணம் செய்து வைத்து என் பிள்ளைகளுக்கும் திருமணம் செய்து வைத்து என் குடும்பத்தை சிறப்பாக்கினீர்கள். பெரியப்பா ஏனம்மா எங்களை விட்டுப் போனார் என்று பிள்ளைகள் கலங்கி நிற்கிறார்கள். சகலன் எல்லாம் முன்னின்று நடத்திவிட்டு விரைவாக எங்களை விட்டுப் போய்விட்டார் என்று என்கணவர் ஏங்கி நிற்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக என் அக்காவுக்கு எப்படி ஆறுதல் சொல்லுவேன். என் அம்மா உங்களைத்தானே நம்பி இருந்தா. தனக்கு எல்லாக்காரியமும் செய்வீர்கள் என்று. எல்லாத்தையும் கனவாக்கி விட்டு எங்களை விட்டுப் போய்விட்டீர்கள். அத்தான் உங்களைப் பற்றி நிறைய எழுதலாம் என் கண்கள் கண்ணீரால் மறைக்கிறது. துக்கம் தாங்க முடியவில்லை உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

மச்சான்

துரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளின் உத்தமன்

என் ஆசை அத்தான் நீங்கள் எம்மை எல்லாம் விட்டு பிரித்த செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்து விட்டேன். இவ்வளவு விரைவாக எங்களை விட்டுப் பிரித்து விடுவீங்கள் என்று எதிர்பார்க்கவில்லை. நாங்கள் சின்ன வயதில் அப்பாவை இழந்த நிலையில் நீங்கள் தான் தகப்பனுக்கு தகப்பனாக இருந்து வழி நடத்தினீர்கள். எவ்வளவு புத்தமதி சொல்லித் தந்தீர்கள்.

அம்மா ரெலிபோனில் கதைக்கும் போது செல்லுவா ஒரு ஆண் பிள்ளை எனக்கு பக்கத்தில் இல்லை. எனது மருமகன் (ராசா) இருக்கிறார் எனக்கு பயம் இல்லை என்று நாங்களும் அப்படி நினைத்து கொண்டு இருக்க நீங்கள் எல்லோரையும் விட்டு பிரிந்தது தான் அளவிட முடியாத வேதனையாக இருக்கிறது.

நீங்கள் உற்றார், உறவினர், ஊர்மக்கள், உங்களோடு அன்பாக பழகினவர்களின் நன்மை, தீமைகள் எல்லாவற்றிற்கும் உங்கள் சொந்த வீட்டு வேலைமாதிரி செய்து சிறப்பித்து விடுவீர்கள் எங்கள் கிராமத்தில் உள்ள சங்கங்கள், மன்றங்கள் எல்லாவற்றுக்கும் மனவிசுவாசத்துடன் உங்களால் இயன்ற உதவி செய்தீர்கள் யாரும் பிழை விட்டால் உடனே தட்டிக் கேட்பீர்கள்.

மனிதனாகப் பிறந்தால் இப்படித்தான் வாழ வேண்டும் என்று வாழ்ந்து காட்டி எங்களை எல்லாம் விட்டு பிரித்து சென்று விட்டீர்களே! அத்தானின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல ஆண்டவனை வேண்டுகிறேன்.

**மச்சான்**

**கெங்கேஸ்வரன் (கிளி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பல்

அன்பான அண்ணரே நீங்கள் எம்மிடையே இல்லை யென்பதை நம்பமுடியவில்லை. அண்ணா நீங்கள் எங்களிற்கு எவ்வளவு உதவி செய்தீர்கள் எனது அம்மா படுத்த படுக்கையாக இருக்கும்போது நீங்கள் அடிக்கடி பார்க்க வருவீர்கள் அப்போது அம்மா உங்களிற்கு சொல்லுவா ராசா நீதான் எனது மரண நிகழ்வை சிறப்புற நடாத்தி விடவேணும் என்று. அதற்கு அண்ணா நீங்கள் கூறுனீர்கள் ஆச்சி நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். எல்லாம் நல்ல படியாக நான் நடத்துவேன் என்று சிரித்த வண்ணம் கூறுவியள் அண்ணா அண்ணா இனி எப்பதான் உங்கள் முகத்தை நாங்கள் பார்க்கப் போகிறேமோ தெரியவில்லை. நாங்கள் நினைத்துப் பார்க்க வில்லை அண்ணா இப்படி சீக்கிரம் இறைவனிடம் போய் விடுவீர்கள் என்று 5-6 வருடம் இருப்பீர்கள் நாங்கள் எல்லோரும் வந்து பார்க்கலாம் என்று ஆனால் ஆசை வீணாக போய்விட்டது. பிள்ளைகள் மாமா, மாமா, என்று கூப்பிட்டபடியே இருப்பார்கள் இனி யாரை மாமா என்று கூப்பிட முடியும் அண்ணா!

மயூரியை உங்கள் அம்மாவென்று கூப்பிடுவீர்கள். நாங்கள் கேள்விப்பட்டதும் என்ன செய்கிறதென்று தெரியவில்லையே அண்ணா. நிலானி தான் மாமாவை பார்க்க முடியவில்லையே என்று கவலைப்படுகிறாள். அன்பான அண்ணாவே நாங்கள் ஊரில் இருக்கும்போது ஷெல் அடித்தால் உடனே சையிக்கிளில் ஓடி வருவீர்கள் மருமக்களை கூட்டிக்கொண்டு போவதற்கு வருவியள் ஒருநாள் கஸ்தூரி, மயூரியை தாவடியில் ராணியின் மாமா வீட்டில் கொண்டு போய் விட்டுவிட்டு வந்தீர்கள் அண்ணா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆயினும் போய் கூட்டி வர முடியாத கட்டம் வந்தது அப்போ உங்களை எல்லோரும் பேரப்பிள்ளைகளை கொண்டுபோய் விட்டுவிட்டு வந்திட்டான். என்று கூற நீங்கள் கவலையோடு தாடியும் வளத்து எடுக்காமல் சாப்பிடாமல் இருந்தீர்கள் அண்ணா. பிறகு மருமக்களை கொண்டு வந்து விட்டு விட்டுதான் சந்தோசமாய் இருந்தனீங்கள் அண்ணா. அம்மா இறந்த பிறகு ஒரு மாதம் எங்களிற்கு துணையாக இருந்தீர்கள் அண்ணா. நீங்கள் எங்களிற்கு செய்த உதவிகளை கணக்கு போட்டாலும் முடியாது அண்ணா! தங்களை இழந்து அழுது துடிக்கின்றோம். எங்கள் அண்ணாவின் ஆத்மா புது உலகில் சந்தோசமாய் இருக்க நாம் ஆண்டவனை பிரார்த்திக்கிறோம்.

**தங்கை: மோகனா**
**மச்சான்: கிளி**
**மருமக்கள்: கஸ்தூரி**
**மயூரி, நிலானி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Do you think angles cry, when someone dies and goes to heaven,
Have you ever thought about how the angels feel,
Taking someone you loved so dearly from you ?



Sometimes even the angels cry,
Over the things they have to do,
Especially taking someone so soon.

When someone so loved by other is taken away,
Even the angels cry,
knowing they have broken many hearts.

Sometimes even the angels cry,
Over the little things you think no one sees,
Especially when it invloves trying to fing some peace.


When someone's life comes to an end,
And the time to crossover has come for them,
Sometimes even the angels cry.

We see ourselves and pwople around us crying,
But have you ever seen an angel cry,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Have you ever felt the pain of an angel,
Having to do the hardest job ever,
Taking away the one you loved with all your heart.



I've seen an angel cry, when the skies dark dark and ready for a stom,
That how you know that angels do cry.

## Missing you

There aren't enough words in any language to you how much I miss you
I miss yoou when the sun dries and the dark skies out
I miss yoou when the clock another second
I miss yoou when the birds fly by
I miss yoou when I feel I need to smile
I miss yoou when I need a sholder to cry on
I miss yoou when the world is all bright and I feel so dark
I miss yoou when I look at picture of you
I miss yoou more knowing I will not get to say good bye
I Know that greates grieve is the lost of a loved one
And knowing that I missed my chance to say good bye will always haunt me
I miss you and I love you Mama.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் என் நினைவில் நிலைத்து நிற்பவர்!!!!

எனக்கு ஒரு நல்ல நண்பனாய், நல்லாசானாய் இருந்தவர் என் அத்தான். அவர் எம்மை எல்லாம் விட்டுப் பிரிந்து எம்மை மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டார். எனக்கு சின்ன வயதில் இருந்து எவ்வளவோ உதவிகள் செய்துள்ளார். அத்தான் அக்காவைத் திருமணம் செய்யும் முன்பே அவர் பின்னேரங்களில் வேலையாள் வந்து படுத்திருப்பார். நான் அவருக்கு மேல் படுத்திருப்பேன். அப்போது றோட்டுமாமி (அத்தானின் தாயார்) இப்பதான் வேலையால் வந்து படுத்திருக் கின்றான் குழப்பாதே என்று ஏசுவா! அதற்கு அத்தான் படுக்கட்டும் என்று சொல்லுவார். அத்தானிடம் தான் நான் நீச்சல், கணக்கு படித்தேன். அப்போது பிழைவிட்டால் அடி, குட்டு எல்லாம் விழும். நான் படிக்கும் போது புத்தகங்கள் வாங்குவதற்கு பணம் தந்து உதவி செய்தவர். எனக்கு பன்னிரண்டு வயது இருக்கும் போது கதிரையில் ஏறிவிழுந்து தழும்பு வந்து விட்டது. அது எனது முகத்தில் நீண்டகாலமாக இருந்தது. அத்தான் தான் என்னை நோவெண்ணை பூசி மாத்தலாம் என்று கூட்டிக்கொண்டு போய் மாத்தினவர். அவர் அப்படிச் செய்யவில்லை என்றால் இப்பவும் எனது முகத்தில் தழும்பு இருக்கும்.

யார் எந்த உதவி கேட்டாலும் முன்னின்று தன்னுடைய விசயம் மாதிரி செய்து முடிப்பார். வீட்டுக்குப் பக்கத்தில் கடை ஒன்று கட்டலாம் என்று கேட்டேன். உடனே அதில் ஒரு கடைகட்டி தந்தவர். அப்படிப்பட்டவர் இன்று எமக்கு சொல்லாமல் சென்று விட்டாரே!! விசவத்தனை முருகன், வழக்கம்பரை அம்மன் திருவிழாக் காலங்களில் வேலைக்கு லீவு எடுத்து கோவிலுக்குச் செல்வார். கோவிலுக்கு போகும் போது வேட்டி கட்டிக்கொண்டு போக வேண்டும் என்று சொல்லி எனக்கு வேட்டி உடுக்கப் பழக்கினவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்தானிடம் குடித்தல், புகைத்தல் போன்ற கெட்ட பழக்கமும் இல்லை. அவர் எல்லோரிடமும் பாசமாக இருப்பார். தவறு என்று தெரிந்தால் யாரென்றும் பார்க்கமால் உடனையே கேட்டுவிடுவார். எனக்கு திருமணமாகி எனது மனைவி டென்மார்க் வந்தபோது அத்தான் பல அறிவுரைகள் சொல்லி கடிதம் எழுதினவர். என் அக்காவிற்கு நல்வாழ்க்கைத் துணைவனாகவும், பிள்ளைகளுக்கு நல்ல தகப்பனாகவும் இருந்தவர். அவர் எம்மை எல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திச் சென்றுள்ளார். அவரின் ஆத்மா சாந்தியடைய காளியம்மனை வேண்டுகின்றேன்.

பிரிவால் வாடும்
மைத்துனர்
செல்வம் குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தைக்கு தந்தையாக இருந்து எங்களுக்கு வழிகாட்டிய உத்தமர்

எனது சிறு வயதிலேயே எனது தந்தையார் இறந்து விட்டார். இதனால் நாங்கள் மிகவும் கவலை அடைந்தோம். இவ் வேளையிலே அன்புக்கும் மதிப்புக்கும் உரிய எங்கள் அத்தான் அமரர் திரு.மா. சிவரத்தினம் அவர்கள் தனது தாய் மாமனுடைய மகளாகிய, எங்கள் மூத்த உடன் பிறப்பாகிய அக்காவைத் திருமணம் செய்து எங்கள் உறவு முறையை வலுப்பெறச் செய்ததுடன் எமக்கெல்லாம் தந்தையாக இருந்து எங்களை அன்புடன் அரவணைத்து வழிகாட்டியவர். எங்கள் குடும்பத்திற்கு முதல் முதல் வந்த மூத்தான அத்தானின் வரவால் எங்கள் குடும்பமும் சிறப்புப் பெற்றது.

எமது குடும்பத்தில் அன்பும், பாசமும் நிறைந்த வழிகாட்டியாக இருந்து எமது உயர் கல்விக்கும், வாழ்க்கைக்கும் நல்வழிகாட்டிய எங்கள் அத்தானை நாம் என்றுமே மறக்க முடியாத மனித குலத்தின் மாணிக்கமாகத் திகழ்கின்றார். எங்கள் அத்தான் எங்கள் மீது வைத்த அன்பின் நிமிர்த்தம் வருடா வருடம் நடைபெறும் தீபாவளிப் பண்டிகைக்கு புத்தாடைகள் வாங்கித் தருவதை நினைக்கும் போது அவரது கண்டிப்புடன் கூடிய அன்பும், கம்பீரமான நடையும், தோற்றமும் எனது மனக்கண் முன்னாலே ஊசலாடுகின்றது.

நல்ல உள்ளம் கொண்ட உத்தமர் நல்ல மனையாளுடன், நன் மக்களையும் பெற்று சிறந்த பண்பாளராக வாழ்ந்தார். இலங்கை போக்குவரத்து சபையின் நடத்துனராக பணியாற்றிய தோடு, சமூக பொதுத் தொண்டுகளிலும் ஈடுபட்டு அவர் ஆற்றிய பணி மகத்தானது. யாரையும் மனம் கோண வைக்க விரும்பாத உயர்ந்த உள்ளம் கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2004ஆம் ஆண்டு நானும், எனது மனைவி பிள்ளைகளும் இலங்கைக்கு வந்தபோது எங்களை அன்புடன் வரவேற்று இனிய பல கதைகள் பேசிய அத்தான் இன்றும் எம் கண்முன்னே நிற்கின்றார். அடுத்த தடவை வரும் போது அத்தான் மிகவும் ஆரோக்கியமாக இருந்து எம்முடன் கதைப்பார் என்று எண்ணிய என் எண்ணமும் வீணானதே. பொட்டிழந்து, பூவிழந்து நிற்கும் எனது ஆசை அக்காவின் அழகிய வதனத்தை எப்படித்தான் பார்ப்பேனோ தெரியவில்லை.



எவ்வாறாயினும் "ஒரு உயிருக்கு பிறப்பு உண்டேல், இறப்பும் நிச்சயம் ஒரு நாள் உண்டு" என்பதற்கு ஏற்ப அத்தானின் ஆன்மா விசவத்தனை வேலனை சென்றடையப் பிரார்த்திப்போமாக.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**கை. இரத்தினவேல் குடும்பம்**
**(ஜேர்மனி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புக்குரிய தவராசா அத்தான்

எங்கள் அப்புமாமி றோட்டுமாமி தவமாய் தவமிருந்து பெற்ற மகன் தவராசா அத்தான் இயற்கை எய்திய செய்தியறிந்து மிக்க வேதனையடைந்தேன் அன்னாரின் ஆன்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டேன். ஒரு நல்ல உறவினரை இனிய நண்பரை இளந்து நாமெல்லாம் தவிக்கிறோம். ஒரு அன்பான குடும்பத் தலைவனை இளந்து எமது சகோதரியும் பிள்ளைகளும் சொல்லொணாத் துயருக்கு ஆளாகியுள்ளனர் அவர்கள் அனைவரும் துயர் மறந்து அமைதி பெற விசவத்தனை முருகன் திருவருளை வேண்டி நிற்கிறேன்.

எமது அத்தான் தவராசா அவர்கள் தாயாருக்கு ஒரு நல்ல மகனாகவும் சகோதரிக்கு ஓர் நல்ல அண்ணனாகவும் இருந்து அவர்களின் அன்பை நிறையவே பெற்றிருந்தார்கள். திருமணத்தின் பின் ஓர் நல்ல கணவனாகவும் பிள்ளைகளுக்கு கடவுள் பக்தியுடையவராகவும் சிறந்த கொள்கைவாதியாகவும் வாழ்ந்து வந்தவர் அதற்கமைய தமது மாமன் மகளை சீர் எதுவும் பெறாமல் கரம் பற்றி கண்ணியமான இனிய இல்லற வாழ்வை மேற்கொண்டிருந்தார்கள்.

சமூக அக்கறையும் தெய்வ சிந்தனையுமுடைய தவராசா அத்தான் அவர்கள் வழக்கம்பரை அம்பாள் ஆலய முன்றலில் மடம் அமைத்து சிவத்தொண்டனாகவும் விளங்கினார்கள் அத்துடன் எமது கிராமத்திலுள்ள அனைத்து சமூக அமைப்புகளிலும் முக்கிய பதவிகளை வகித்து எமது கிராமத்தின் முன்னேற்றத்திற் காகவும் பண்ணாகம் மக்களின் நல்வாழ்விற்காகவும் அயராது உழைத்தார்கள் விசவத்தனை முருகன் தேர்த்திருவிழாவின் போது தண்ணீர்ப்பந்தல் அமைத்து தாகசாந்தி செய்தார்கள் அன்னாரின் சிறப்புகளும் தேவைகளும் ஏராளம் என் நெஞ்சில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்திருக்கின்றன அவற்றில் சிறு துளியே இங்கு பதிவு செய்கிறேன்.

உறவினர்கள் வீட்டில் நிகழும் அனைத்து நிகழ்ச்சி களிலும் கலந்து சிறப்பிப்பதுடன் முன்னின்று நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தி மகிழ்வார்கள். நான் ஊருக்கு சென்றவேளை எங்கள் வீட்டு வாசலில் காத்து நின்று என்னை வரவேற்று கட்டித்தழுவிய நினைவுகள் கண்ணீரை வரவழைக்கிறது. நிறைவான வாழ்வை வளமாக வாழ்ந்து இறைவன் திருவடியடைந்த எனது அத்தான் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

**என்றென்றும்**
**தவராசா அத்தான் நினைவுகளுடன்**
**வெற்றிவேலழகன்**
**(ஜேர்மனி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் ஆசை அப்பாவே!

எனதருமை ஆசை அப்பாவே! எங்களை விட்டு பிரிந்து எங்கே போனீர்கள். ஆசைக்கு ஒன்றாக என்னைப் பெற்று சீரும் சிறப்புடன் சீராட்டி பாராட்டி வளர்த்தீர்களே! இப்பொழுது என்னைத் தவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள்.

அப்பா, அப்பா, என்று உங்களை நான் இனி எங்கே, எப்படி அழைப்பேன். அப்பா என்னை ராசாத்தி என்று ஆசையாக அழைப்பீர்களே! இனி என்னை யார் அப்படி அழைப்பார்கள்! அப்பா உங்கள் குரலைக் கேட்க முடியாதா! உங்களைப் பார்க்க முடியாதா! என்று பரிதவித்து ஏங்குகின்றேன் எனது ஏக்கத்தைத் தீர்க்க ஓடி வருவீர்களா? அப்பா! நான் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் உங்களுக்கு மகளாகத் தான் பிறக்க வேண்டும். உங்கள் மகள் என்ற பெருமையே எனக்குப் போதும். அப்பா உங்களுடன் இருந்த காலங்கள் மறக்கமுடியாதவை! உங்களின் செல்லப் பெண்ணாக வளர்த்தீர்களே. இப்போது எனக்கு சொல்லாமல் சென்றீர்களே! அடுத்த வருடம் வந்து எனது ஆசை அப்பாவை பார்ப்பேன் என்று நினைத்தேனே. அப்பா நீங்கள் ஏனப்பா எனக்கு சொல்லாமல் சென்றீர்கள்! தங்களை இழந்து தவிக்கின்றேன். உங்களுடன் இருந்த காலத்தில் நான் எல்லா இன்பங்களையும் பெற்றேனே! இப்ப இழந்த துன்பத்தை என்னால் தாங்கமுடியவில்லையே!

அப்பா! என்னைச் செல்லமாக வளர்த்து ஏன் வெளிநாட்டில் திருமணம் செய்து கொடுத்தீர்கள். உங்கு என்றால் உங்களுடனேயே இருந்திருப்பேனே! என்னை வெளிநாடு அனுப்பி விட்டு நீங்கள் அழுத அழுகையை மறக்கமுடியவில்லையே! இப்போது எம்மை அழவிட்டு எங்கு சென்றீர்கள். ஊருக்கு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுக்கு, கோவிலுக்கு என்று ஓடி ஓடி சேவை செய்தீர்களே! இனி யார் அப்பா இருக்கிறார்கள்.

அப்பா என்னை ஏன் செல்லமாக வளர்த்தீர்கள். என்ன கேட்டாலும் தம்பிமாருக்கு இல்லாவிட்டாலும் எனக்கு வாங்கித் தருவீர்களே! அம்மா ஏசினாலும் என்னுடைய ராசாத்தியை ஏசாதே அவள் என் செல்லம் என்று சொல்வீர்களே! எங்கு கேட்டாலும் அழைத்துச் செல்வீர்களே! இனி நான் உங்கு வந்து யாரிடம் கேட்க! எனக்கு யார் இருக்கிறார்கள் உங்களைப் போல்!!

அப்பா அம்மா உங்களை இழந்து தனிமரமாக நிற்கின்றாவே! அம்மாவை விட்டு ஒரு இடமும் நீங்கள் தனியே சென்றதில்லையே. இப்போது அம்மாவை தனித்து ஏங்க விட்டு சென்றதேனோ? அப்பா அம்மாவிற்கு யாரப்பா துணை. காலம் முழுவதும் வருவேன் என்று என் அம்மாவைக் கைப்பிடித்து இப்போ பாதிவழிதனிலே பிரிந்து எங்கு சென்றீர்கள். அன்றில் பறவைகளாக வாழ்ந்தீர்களே! அம்மாவைத் தவிக்கவிட்டு சென்றதேனோ! மூன்று மகன்மார் எனக்கிருக்கின்றார்கள் எனக்கென்ன கவலை என்று ராஜா மாதிரி இருந்தீர்களே. இன்று அவர்களையும் தவிக்கவிட்டு சென்றதேனோ! அப்பா உங்களின் ஆசை என்னவென்று எமக்கு சொல்லாமலே சென்றுவிட்டீர்களே!

அப்பா அப்பா என்று அழுது புலம்புகின்றேன் எனது புலம்பல் உங்கள் காதில் விழுகின்றதா! ராசாத்தி இலங்கையைச் சுற்றிப் பார்க்கப் போகிறாயா என்று கேட்டு சிவனொளிபாதமலை வரை என்னை அழைத்துச் சென்றீர்களே! தற்போது நீங்கள் அந்தச் சிவத்துடன் ஐக்கியமாகி விட்டீர்களே! அப்பா எனது ஆசை அப்பா என்னிடம் வருவீர்களா! அப்பா என்னால் தாங்க முடியவில்லையே! உங்களை இழந்து தவியாத் தவிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை எனக்கு உங்கள் புன்சிரிப்பான முகத்தைக் காட்ட மாட்டீர்களா!

அப்பா எங்கு சென்றாலும் ஜெயத்தையம் கூட்டிச் செல்வீர்களே! இப்போது செல்லும் போதும் ஜெயத்தின் கையைப் பிடித்தபடியே தானே விண்ணுலகம் சென்றீர்கள். அப்பா அவனால் எப்படியப்பா தாங்க முடியும். அவனை விட்டு நீங்கள் இருக்கமாட்டீர்களே! அப்பா உங்கள் பிள்ளைகளை நல்ல குணசாலிகளாக வளர்த்தீர் களே. எங்களை யாரும் யாரின் பிள்ளை என்று கேட்க மாட்டார்கள். மாறாக தவராசாவின் பிள்ளையா என்று கேட்பார்கள். அப்பா ஒருமுறை வந்து பார்க்க மாட்டீர்களா!

எனது தம்பி காந்தி அழுது புலம்புகின்றான். தனது பிள்ளைகளைப் பார்க்காமலே சென்றுவிட்டார் என்று அவனுக்கு எனப்பா பதில் சொல்வது. விஜி மாற்றம் வாங்கி அப்பாவுடனும், அம்மாவுடனும் இருக்கப்போவதாக கூறினானே! அவனையும் பார்க்காமல் சென்றதேனோ!

அப்பா அம்மம்மா உங்களை நம்பித்தானே இருந்தா. பிள்ளைகள் வெளிநாட்டில் என்றாலும் என்னுடைய ராசா இருக்கிறான் எனக்கு கொள்ளி போட என்று சொல்லுவாவே! அம்மம்மாவையும் ஏமாற்றி சடுதியாக காலனிடம் சென்றதேனோ! அப்பா உங்களைப் பற்றி எழுதுவது என்றால் எழுதிக் கொண்டே போகலாம் என்னால் எழுத முடியவில்லை. எனது ஆசை அப்பாவின் ஆத்மா ஆண்டவனின் பாதங்களைச் சென்றடையும் என நம்புகின்றேன்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**உங்களை இழந்து தவிக்கும்**
**பாசமான மகள்**
**உங்கள் ராசாத்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது அன்பு மாமாவே!

அன்பான மாமாவே!
உங்களின் செல்ல மகளை எனக்கு திருமணம் செய்து தந்து
எனக்கு உறவாக வந்து பேரின்பம் தந்தீர்களே!
ஒன்று என்றால் தாவடிக்கு ஓடுவீர்களே!
உதவிகள் பற்பல செய்தீர்களே!
உங்களை இழந்து உங்கள் மகள் துடிக்கின்றாள்!
எப்படி ஆறுதல் சொல்வேன்!
எனது அப்பாவை இழந்து ஒரு வருடம் பூர்த்தியாகியதும்
தாங்களும் சடுதியாக சென்றதேனோ!
ஆற்றுவார் இன்றி அழுகின்றோம்!
ஒரு தடவை எம்மை காண வாரீர்களே!
உங்களின் நல்லாத்மா இறைவன் பாதங்களை சரணடைய
பிராத்திக்கின்றோம்!!!!!!

அன்பு மருமகன்

# பேத்திமார் கதறல்

அம்மப்பா, அம்மப்பா என்று ஆசையாக அழைத்தோமே!
ஆசையாக உங்களுடன் கதைத்து மகிழ்ந்தோமே!
வருடம் வருடம் வந்து சந்திப்போம் என்று மகிழ்ந்திருந்தோமோ!
எங்களுக்கு சொல்லாமல் கொள்ளாமல் சென்றதேனோ!
எங்கள் ஆசை அம்மப்பா திரும்பி வந்து
எங்களுடன் விளையாட மாட்டீர்களா!
தங்களை இழந்து தவிக்கின்றோம் துடிக்கின்றோம்!
அம்மப்பா, அம்மப்பா, அம்மப்பா!!!!!!!!!!

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பேத்திமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பாசமிகு அப்பா!

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"

என்ற பொய்யாமொழிப் புலவனின் வரிகளிற்கு அமைய இவ் வையகத்தில் எம்மை நன்கு வாழ வைத்தவர் என் பாசமிகு அப்பா. எமக்காக அவர்பட்ட இன்னல்கள் சொல்லியடங்காது. அன்பு, பாசம், ஒழுக்கம் என்ற எல்லாவற்றை யும் ஊட்டி வளர்த்தவர் என் அப்பா. படியடா... படியடா... என்று கல்வியை ஊட்டிய போது அதன் அருமை புரியாது விளையாட்டுப் பிள்ளையாக இருந்த என்னை கண்டித்துப் பார்த்தீர்கள் அப்பா. ஒழுங்காக கல்வியை கற்று இருந்தால் இறுதிக்காலத்தில் நானும் உங்கள் அருகில் இருந்திருப்பேன். ஆறவில்லை என் மனது வெளிநாடு வந்து கடைசி நேரத்தில் உங்களை காணாது தவிக்கிறேன் அப்பா.

மூத்தமகன் என்னை அப்பு..., அப்பு..., என்று தானே செல்லமாக அழைப்பீர்கள். பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள அந்நிய தேசத்தில் இருந்து உங்களை காணவர முயற்சி செய்து கொண்டு இருக்கையில் உங்கள் செல்ல மகன் என்னை பார்க்காமல் போக எப்படி அப்பா உங்களுக்கு மனம் வந்தது.

வெளிநாட்டில் வாழ்ந்துகொண்டு இருந்த எனக்கு தக்கதோர் வாழ்க்கை துணையை தேர்ந்தெடுத்து இந்தியா வரை வந்து எனக்கு திருமணமும் செய்து வைத்து அழகு பார்த்தீர்கள் அப்பா. என் பிள்ளைகளுடன் உங்களை பார்க்க வர இருக்கையில் திடீர் என்று மரணித்துவிட்டீர்களே அப்பா.


அம்மாவும் அழுகின்றா மூத்தபிள்ளை நீ அப்பாவுக்கு செய்ய வேண்டிய கடமையை விட்டு விட்டாயே என்று, தாங்க முடியவில்லை அப்பா அழுகின்றேன். வெளிநாடு வந்த பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளின் நிலமை இதுதானே. நாலு சுவருக்கள் கிடந்து கதி கலங்கி நிற்கிறேன் ஒருமுறை உங்களை காணமுடியாத என்று. ஆற்றுவார் யாருமின்றி அழுகின்றேன் அப்பா. என் அம்மாவுக்கு ஆறுதல் சொல்ல வார்த்தைகள் இன்றி தவிக்கிறேன் அப்பா.

இருப்பினும் மரணத்தை வெல்ல எவராலும் முடியாது என்று நினைத்து வாழ்வதுதான் மனிதம். நீங்கள் மரணித்தாலும் உங்கள் நினைவுகள் எம் மனதில் இருந்து மரணிப்பதில்லை அப்பா.



**என்றும் உங்கள் நினைவுடன்**


**மகன்**

**காந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி எங்கே காண்பேன்!



இறைவா! இனி எங்கே காண்பேன் என் மாமாவை
இழப்புக்கள் நிறைந்த என் வாழ்வில்
ஏன் இந்த துயரம்
எங்கு சென்றீர்கள் மாமா
ஏங்குகிறது என் மனது
எத்தனையோ மைல்களுக்கு அப்பால் இருந்தாலும்
ஏங்கியது என் மனது உங்களை காண
எத்தனையோ முயற்சிகள் எடுத்தும்
எங்களால் காணமுடியவில்லை உங்களை.

எங்களுக்கு மகன் பிறந்த போது
எனக்கு பேரன் பிறந்திருக்கிறான் என்று
பெருமிதம் அடைந்தீர்கள்
உங்கள் பேரனை பார்க்காது
உங்கள் உயிர் எப்படி போதனது மாமா!
தவிக்கிறது என் மனது
தங்களை என் பிள்ளைகளுக்கு காட்டிமுடியாத
பாவியாகிவிட்டேனே மாமா


என்ரை அப்பா தேடிதந்த பெண் தானே நீ என்று
என் கணவர் எப்போதும் சொல்வார்
அப்படி, அப்பா உங்கள் மீது எவ்வளவு
அன்பும் மரியாதையும் கொண்டிருந்தவர்
அவர் கூட கடைசி நேரத்தில் உங்களை
காணவில்லை என்று
கதி கலங்கி நிற்கிறார்
ஆறுதல் சொல்ல தெரியாது அழுகிறேன் மாமா
ஆண்டவனடியில் நீங்கள் இருப்பீர்கள் என்று
ஆற்றுகிறோம் எம் மனதை.

மருமகள்
நிரஞ்சினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அப்பப்பா!



அப்பப்பா! அப்பப்பா!
ஆசையாக புகைப்படத்தில் தான் பார்த்திருக்கிறேன்
அம்மப்பாவையும் பார்க்கவில்லை
அன்புடன் உங்களை காணலாம் என்று
இலங்கை வர இருக்கையில்
திடீர் என்று எங்கு போனீர்கள் அப்பப்பா!


உங்கள் அப்பப்பாவை பார்க்க
ஊருக்கு எப்படா போகப் போறீர்கள் என்று
எத்தனையோ உறவுகள் கேட்டபோதும்
ஏங்கியிருக்கிறேன் உங்களை காண்பதற்கு
எங்கள் ஏக்கம் புரியாது
இறைவன் உங்களை
எங்களிடம் இருந்து பிரித்து விட்டானே...

**உங்கள் பேரன்மார்**
**சி. ராகுலன்**
**சி. சர்மிலன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புத் தவராசா அம்மான்




என் தாயின் தாயோடு பிறந்த
தவமணி ஆச்சி பெற்ற தவப்புதல்வன்
எனது அன்புத் தவராசா அம்மான்
சொல்லாமல் கொள்ளாமல் எல்லோரையும்
தவிக்கவிட்டு தனியாகச் சென்றுவிட்டார்
ஒரு தாயைப் போல் பாசம் காட்டினீர்கள்
ஒரு தந்தையைப் போல் வாழ வழி காட்டினீர்கள்
நல்ல நண்பனாய் நல்ல உறவினராய் கூட இருந்து
எனக்கு நல்லது கெட்டது சொல்லிக் கொடுத்தீர்கள்
என் இளமையின் தேவை அறிந்து எனக்கு
இல்லறம் எனும் நல்லறம் பெற்றுத் தந்தீர்கள்
இனிய மனையாளோடு இங்கு நான் மகிழ்ந்திருக்க
ஊர் வரும் ஒவ்வொரு முறையும் உங்கள் முகம் காண்பேன்
இனி உங்கள் முகம் காண எங்கு நான் செல்வேன்
எல்லா சோகமும் கவலையும் என்னோடு இருக்க
தவராசா அம்மான் விசவத்தனை முருகன் திருவடியில்
அமரவாழ்வு வாழ முருகன் திருவருளை வேண்டுகிறேன்.

தவராசா அம்மான்
ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
**மருமகன் து. சிவநேசன் (சீவா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வத் திருவுருவாம் எங்கள் பெரியப்பா என்றும் எங்கள் நினைவுகளில்



எங்கள் இனிய பெரியப்பா மண்ணுலக வாழ்வு போதும் என்று விண்ணுலகு சென்றுவிட்டார். விசவத்தனையான் திருவடியில் நின்மதியாய் துயின்றுவிட்டார். எங்கள் பெரியப்பாவின் இளப்பால் எங்கள் குடும்பத்தவர் அனைவருமே துயரநினைவுகளில் தவிக்கிறோம். தன்னிலை மறக்கிறோம் எங்கள் பெரியம்மா சகோதரர்கள் அனைவரது துயரிலும் நாமும் கலந்து பெரியப்பாவின் ஆன்மா இறைவன் திருவடியில் நிறைவான சாந்தி பெற பிரார்த்திக்கிறோம்.

இத்துயரவேளையிலும் எங்கள் பெரியப்பா எம்மோடு வாழ்ந்த காலத்து இனிய நினைவுகளை எம் உறவுகளோடு பகிர்ந்து கொள்கிறோம். எங்கள் குடும்பத்தில் நிகழ்ந்த இரண்டு திருமணங்களும் எங்கள் பெரியப்பாவின் நல்லாசிகளுடனும் பேருதவியுடனும் நடைபெற்றன என்பதை மிக்க நன்றியுடன் நினைவு கூறுகின்றோம். நல்ல வாழ்க்கைத் துணைகளைப் பெற்று பெரியப்பாவின் நல்லாசிகளே காரணமாகின்றன.

ஒன்றுபட்ட மக்கள் ஒற்றுமையுடன் வாழும் பண்ணாகத்தில் தவமணியாச்சியின் தவத்தின் பலனாய் பிறந்த எமது பெரியப்பா நல்ல பண்பாளனாகவும் பெரியோரை மதித்து நடக்கும் குணமுடைய வராகவும் நிறைந்த நட்பு வட்டாரங்களையுடையவராகவும் வாழ்ந்து வந்தமை பெருமையுடன் நினைவு கூறத்தக்கது. எங்கள் மண்ணுக்கு திரும்பவும் ஒவ்வொரு தடவையும் உங்கள் நினைவுகளுடனேயே திரும்புவோம் உங்கள் கனிவான சிநேகமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பார்வையே எங்கள் நெஞ்சில் பசுமரத்தாணியாக பதிந்திருக்கிறது.

ஆயுள் நீண்டதாக இறைவன் உங்களுக்கு தராவிட்டாலும் வாழ்ந்த காலத்திலேயே எல்லோர் மனங்களிலும் நீங்கா இடம் பெற்று வாழத்தக்க நல்ல வாழ்வைத் தந்திருந்தார். மனதில் தோன்றுபவற்றை ஒளிவு மறைவின்றி பேசும் உங்கள் யதார்த்தமான போக்கு எல்லோர் மத்தியிலும் உங்களை நடுநாயகமாக காண்பித்ததுண்டு. உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் ஓடிச்சென்று உதவி செய்யும் உங்கள் உயர்ந்த பண்பை பலரும் பாராட்டியது கண்டு நாமும் மகிழ்ந்ததுண்டு.

நாம் வாழும் காலமெல்லாம் பெரியப்பா நினைவுகள் நிலைத்திருக்க வேண்டுவதுடன் பெரியப்பாவின் புகழ் நீடு நீடு வாழ வாழ்த்துகிறோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

**பெரியப்பாவின் நீங்கா நினைவுகளுடன்**
**ஜெனனி, ஜெனனன்,**
**ஜெனிதா, ஜெனகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசமிகு அப்பா

தந்தையாய், தாயாய், ஆசானாய், நண்பனாய் இருந்து என்னை வழிகாட்டி சீராட்டி, பாராட்டி வளர்த்தீர்களே! என்னை தவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள் அப்பா!

என்மேல் எத்தனை பிரியம் வைத்திருந்தீர்கள். இனி அப்பா என்று நான் யாரை அழைப்பேன்! இறுதிமூச்சு நான் கூட இருந்தேன் அப்பா ஆனால் உங்களை காப்பாற்ற முடிய வில்லையே!

என்னை எங்கு சென்றாலும் அழைத்துச் செல்வீர்கள்! இனி என்னை யார் அழைத்துச் செல்வார்கள். சிறுவயது முதலே என்னை செல்லமாக ஜெயக்கட்டி என அழைத்தீர்கள் இனி யார் அழைப்பார்கள்!

என் உயிரிலும் மேலான அம்மாவை தனித்து விட்டுச் சென்றது ஏனோ! அம்மா இறுதிமூச்சுவரை உங்களை எவ்வளவு கவனமாக பார்த்தா. நீங்கள் விட்டு பிரிவதற்கு சற்று முன் கூட பால் பருக்கினா, ஆனால் நீங்க சென்று விட்டீர்களே. உங்களை காப்பாற்ற பிள்ளைகளை விட துடியாய் துடித்த அம்மாவிற்கு யாரப்பா ஆறுதல் சொல்வது! தன் தெய்வத்தையே இழந்து தவிக்கும் தவிப்பை கண்கூடக் கண்டேன் அப்பா! சாந்தி அடையும் போது என்னைப் பார்த்தவாறு இருந்தீர்கள் இவன் ஏன் பேசாமல் இருக்கிறான் என்ற ஓடோடி வந்த அம்மாவை ஏங்க வைத்துச் சென்றது ஏனோ! எதிர்கால நிலை தெரியாமல் இருக்கும் அம்மாவிற்கு யார் ஆறுதல் கூறுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைக்கு ஒருமகளும் மூன்று மகன் மாரையும் பெற்றெடுத்து வாழ்க்கையை திறம்பட நடாத்தினீர்கள். பிள்ளை களைக்கூட ராசாத்தி, அப்பு, ஜெயக்கட்டி, விஜிக்குட்டி என்று செல்லமாக அழைத்தீர்கள் இனிய யார் அழைப்பார்கள்!

மூத்த மருமகளையும் வந்து உதித்த சூரியன் போல் இருந்தாய்! என்ன கேட்டாலும் மறுக்காமல் செய்தாய் ராஜா என்று புலம்பும் அம்மம்மா! இனி யார் இருக்கிறான் எனக்கு என ஏங்கித்தவிக்கின்ற அம்மம்மாற்கு என்ன சொல்கிறது!

உங்கள் அன்புச் சகோதரி புலம்பித் தவிர்க்கிறார்! உங்களின் இறுதிச் சடங்கிங்கு கூட வரமுடியவில்லையே என்று எனக்கு வந்த காலன் என்னைவிட்டு உன்னை கவர்ந்து சென்றதேனோ! என ஏங்கித் தவிக்கின்றார்.

என் அருமை அக்காவே ராசாத்தி என்று செல்லமாக அழைத்தீர்கள்! டென்மார்க்கிலிருந்து அழுது புலம்ப இறுதிவரை அக்காள்முகம் பாராமல் சென்றதேனோ! என்னையும் அக்காளையும் எங்கு போனாலும் கூட்டிப் போனீர்கள்! தனித்து செய்வதற்கான துணிவை ஏற்படுத்தினீர்கள். அக்காள் கூறுவாள் டேய் அடுத்த வருடம் நான் வருவேன் அவரை அப்பாவை நீதான் பார்க்க வேண்டும். அக்காள் வந்து அப்பா எங்கு என்று கேட்டால் நான் என்ன சொல்ல இவ்வாறு ஏங்கித் தவிக்க சென்றீர்களே!

என் அருமை அண்ணா லண்டனில் ஏங்கித் தவிக்கிறான். அப்பாவை பார்க்க வேண்டும். தன்னுடைய பிள்ளைகளை காண்பிக்க வேண்டும். அப்பாவை கவனமாக பார் என்று இனி நான் அண்ணாவிற்கு என்ன பதில் கூறுவது இவ்வாறு தவிக்க விட்டு சென்றீர்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது பாசத்தம்பி கொழும்பிலிருந்து அடிக்கடி T.P எடுப்பான் அப்பா எப்படியிருக்கிறார்! நான் விரைவில் மாற்றம் பெற்று எப்படியும் வருவேன். கவனமாக பார் விடுமுறையில் வந்து அப்பாவை வைத்தியசாலையில் வைத்து பார்த்தான். மறுநாள் வேலை நிமிர்த்தமாக சென்றான் அப்பா எப்படியிருக்கிறார் என்று உடனே கேட்டான். அப்பா உள்ள மாதிரித்தான் இருக்கிறார் என்றேன் நான்வரவா எனக்கு வேலை செய்யப் பிடிக்கவில்லை என்று புலம்பினான். அப்பாவின் மரணத்தை கேட்டு தவித்தான் புலம்பினான் உடனே ஓடி வந்தான் அப்பா! நான் என்ன சொல்ல என்னால் முடியவில்லையே அப்பா!

என்மேல் அதிக பாசம் வைத்திருந்தீர்களே! என் உயர்விற்கு வித்திட்ட உத்தமனாய் இருந்தீர்களே!

கணிதமே வெறுப்பாய் இருந்தேன்
கணிதத்தை ஊட்டினீர்கள்
பாடசாலையில் அப்பாவினால் பெருமை பெற்றேன்
O/L பரீட்சையில் சித்தியடைந்தேன்
A/L பாட தெரிவு செய்ய அப்பாவை நாடினேன்
என்விருப்பம் தன் விருப்பம் என்றார்
கலைப்பாடத்தை தெரிந்தேன்
அதில் தேர்ச்சிபெற பாடுபட்டார் அப்பா
கல்விக்கே முக்கியத்துவம் கொடுத்தார்அப்பா
முதல் தேர்வில் தோல்வியடைய என்னை
தேற்றினீர்கள் அப்பா
இரண்டாம் முறை நான் பரீட்சை எழுத
எனக்கு தெரியாமலே அதிபரை நாடினீர்கள்
அனுமதியும் பெற்றீர்கள்
A/L எழுத கொழும்பிலிருந்து அழைத்தீர்கள்
பரீட்சை எழுதி பெறுபேற்றைப் பார்த்தேன்
அப்பாவிடம் ஓடினேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைவிட அதிக சந்தோஷப்பட்டவர்
என் அருமை அப்பா
கல்வியில் கல்லூரி கிடைக்க - நான்
போக மறுத்தேன்
அப்பா நீங்களே விடாமல் - என்னை
அனுப்பினீர்கள்
ஆசிரியராக தெரிவு செய்யப்பட்ட
யாழ்ப்பாணத்திலே எனக்கு வேலை கிடைக்க
வழக்கம்பரை முத்துமாரி அம்மனிடம் மன்றாடினீர்கள்
நேர்த்தியும் வைத்தீர்கள்
அப்பா உங்களின் உறுதுணையால்
யாழ்ப்பாணத்தில் வேலை பெற்னேன்
எனக்கு வேலை கிடைத்தவுடன்
உடனே பஸ் ஏறி பாடசாலை வந்து
அதிபரை சந்தித்தீர்கள் இவை எனக்கு தெரியாது
பிற்பாடு அம்மா கூறினார்
எனக்காக அம்மனுக்கு சிங்கவாகனம் வழங்கினீர்கள்
இப்படியான அப்பாவை இனி நான்
காணமுடியாதா...
இறைவா நான் என்ன செய்வேன்
நல்ல பண்புடனும் சமூகத்துடன் வாழ
வழி ஏற்படுத்திய உத்தமன் என் அப்பா!
அப்பாவின் பணிகளை கூறுவதற்கு
பாரதமே எழுதலாம் ஆனால்
என்னால் எழுத முடியவில்லை
அப்பாவின் ஆத்மா இறைவனடி சேர
எல்லாம் வல்ல முருகனையும், அம்மனையும்
பிரார்த்திக்கின்றேன்.

உங்களின் இழப்பால் துயருறும்
மகன் ஜெயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியவில்லை மாமாவின் மரணத்தை

நிகழ்வுகளின் போது மருமகள் இவள் என
மற்றவர்க்கும் புரிய வைத்தீர்களே!
அருகினிலே வந்து அறுகருசி போடவில்லையேஎன
அதட்டியே கேட்பீர்களே!

செல்லமாய்ப் பேரனை "கடவுள்" என்றீர்கள்
ஷேவிதனும் அப்பப்பா எங்கே என கேட்கிறான்
எங்கு சென்று காட்டுவது - அவனை
எப்படித் தேற்றுவது.

காலனே உனக்கு ஈவு இரக்கமில்லையா?
காலம் வருமுன்னே மாமாவை கூட்டி சென்றாய்
அவரது கடமை எங்கே! கண்ணியம் எங்கே!
எல்லாமே ஒருபிடி சாம்பலுக்காகவா!

**என்றும் அன்பு மருமக்கள்**
**கிரிசாந்தினி**


# அப்பப்பா ஓடி வாருங்கள்....

அப்பப்பா... அப்பப்பா... என்று நான் அழைக்க
ஒரு கணம் ஓடி வாருங்கள்
"கடவுள்" என அழைத்தீர்கள்
கடவுள் நான் இங்கிருக்க
கடவுளிடம் சென்றதென்ன
நான் பள்ளிக்கூடம் செல்லுமுன்னே
பாதியிலே போன மாயமென்ன!

**என்றும் அன்புடன் பேரன்**
**ஷேவிதன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "காலனின் பிடியில் காந்தன்களின் காவலன்"



நாலுபோர் நாம் இருக்கிறோம்
        நான்தான் கனகாலம் கூட இருந்தேன்
நீர் பிரியும் வேளையில் நானுமில்லை
        நீர்போகும் இடம் எங்கும்
என்னையும் அழைத்து போவீரே...
        யார் வந்து அழைத்ததப்பா
யான் இங்கு கதறுகிறேன் பாரப்பா...


தாயோடு உறங்கியது சிலகாலம்
உம்கையில் உறங்கியது பலகாலம்
நீர் உணவு உண்ணும் வேளையில்
பொரியல் கறியல் எல்லாம் பறித்திடுவேன்
ஆசைப் பட்ட எதையும்
மறுப்பின்றி தந்திடுவாய்ப்பா
இன்று எப்படித் தருவாயப்பா...
தன தளத்த குரலில் எப்ப வருவான் என
அம்மாவிடம் கேட்பீரே
இப்ப எனைக் கேட்க யாரப்பா...

எமக்கு மணம் முடித்த வைத்தீரே
        அண்ணிமார் இரண்டு பேரும்
அன்பாகக் கதைத்து விட்டனராம்
        தன்னோடு கதைக்கவில்லையென
எனக்கு முன் அழுதாளப்பா என் மனைவி
        ஏன் என்றால் என்னை விட
உம்மைத்தான் அதிகம் பிடித்ததப்பா...
        என் விதிப்பயனோ வினைப்பயனோ...
என் அப்பாவை பறித்துவிட்டினப்பா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருத்தத்தில் நீர் பரிதவிக்க
துக்கத்தில் அம்மா அழுது கொண்டிருக்க
தூரத்தில் அக்கா ஏங்கி நிற்க
ஏக்கத்தில் பெரியண்ணா கேட்டிருக்க
பக்கத்தில் சின்னண்ணா பார்த்திருக்க
சொல்லியழா துயரத்தில் எமைவிட்டு
சொர்க்கத்தில் வாழ்த்தான் சென்றீரோ...
கால தேவனை கவர்ந்து விட்டாய்
எம் காவலனை கனிப்புடனே வாழவிடு...



அன்பு மகன்
விஜி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலங்குகிறேன் மாமாவை காணாது

நீங்கள் இல்லா நிகழ்வுதனை
நாங்கள் எல்லாம் கண்டதில்லை
பாராட்டாதவர் யாருமில்லை
பாரினில் உங்கள் புகழை
கண்பட்டதால் மாமா
உம்மேனி புண்பட்டதோ
கடலான மனம் கொண்ட
கள்ளமில்லா மாமா
கதை சொல்ல முடியாமல்
கலங்கித்தான் போயிருப்பார்

உதவிக்கி உகந்த உத்தமரே
உங்கள் உளவேதனையை யாம் அறியோம்
மழலைச் சிரிப்போடும்
மட்டில்லா மகிழ்வோடும்
வரும்போதெல்லாம் வாசிலில்
வரவேற்று நிற்பீரே - மாமா
கடவுளே ஏன் அழைத்தாய்
கலங்க எம்மை வைத்துவிட்டு
பூமுகத்தை காண்பதெப்போ
சிரிப்பொலியை கேட்பதெப்போ

அருகிருந்து பார்த்தேனே மாமா உங்கள்
ஆவிதான் பிரியும் போது
கதறி அழுகின்றேன்
காதுவரை கேட்கலையோ
காலன் அவன் இரங்கலையோ
காலங்கள் கரைந்தாலும்
கரையாது உங்கள் நினைவு
என்றும் என் மனதில்
நிலைத்திருக்கும் உங்கள் விம்பம்

**கண்ணீருடன் மருமகள்**
**புஸ்பலதா (சுதா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தவராசா ஒரு தர்மராசா"

அமரத்துவம் அடைந்த மாணிக்கம் சிவரத்தினம் அவர்கள்! மாணிக்கத்தின் விம்பமாகவும் தவராசாவாகவும் மிளிர்ந்தது மட்டுமன்றி உண்மையிலேயே எமது கிராமத்தில் வாழ்ந்த ஒரு பொதுநலம் கொண்ட கிராமப் பற்றாளனாக வாழ்ந்துள்ளார். அவர் குடும்பத்தாருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு அவர் மகன் ஜெயகாந்தன் ஊடாக எனக்குக் கைகூடியது நானும். அவர் மகனும் நண்பர்கள் நால்வரும் ஒன்றாக உண்டு, ஒன்றாக உறங்கி அவரது இல்லத்தில் தங்கி கல்வி கற்ற அந்த நாளினை எண்ணிப் பார்க்கின்றேன். க.பொ.த. சாதாரண, உயர்தர வகுப்புக்களில் அவரில்லத்தில் தங்கி கல்வி கற்ற காலங்கள் எம் வாழ்விற் பொற்காலம் என்றே கூறலாம். நாம் துள்ளித் திரியாது பள்ளிப் பாடத்தைப் பயில அக்கறையுடன் நெறிப்படுத்துவதில் எமக்கு நல்லாசானாகவும் அதிகாலை எழுந்து எமது கல்விக்காக தானும் விழித்திருந்து அடுப்புமூட்டி தன் மனையாளை துயிலெழுப்பி எமக்குத் தேநீர் கொடுப்பதிலே வளர்ப்புத் தந்தையாகவும், தவறிளைக்கும் போது அதனைத் திருத்துவதில் கண்டிப்புள்ள மனிதராகவும் அவர் எமக்காற்றிய அளப்பரும் பணியினை நாம் என்றுமே மறக்க முடியாத நாம் இன்று கற்று நன்னிலை அடைவதற்கு வழிப்படுத்திய பெருமை அன்னாரையே சாரும். எமக்கு வழிகாட்டியது மட்டுமன்றி எமதூரிலும் அயலூரிலும் உள்ள பல மன்றங்களிலும் சங்கங்களிலும் அவர் இதய சுத்தியுடன் பணியாற்றியதை நான் நன்கறிவேன். நாடகங்களில் தான் நடித்தும் நாடகங்களை நெறிப்படுத்தியும் கலை வளர்ச்சிக்கு அன்னார் அளப்பரிய பங்காற்றியுள்ளார். எமது ஊரில் நடக்கின்ற பூர்வ அபரக்கிரிகைகளைத் தயார்படுத்தும். வரன்முறை தெரிந்தவராகவும் அவற்றை செவ்வனே நிறைவேற்றும் தொண்டனாகவும் மிளிர்ந்துள்ளார் தன் பிள்ளையைப் போலவே எங்களையும் அரவணைப்பதிலும் கண்டிப்பதிலும் பாகுபாடு காட்டாதவர்! எங்கள் எல்லோராலும் "முத்தமாமா" என அன்புடன் அழைக்கப்படும். எங்கள் நலனில் அக்கறை கொண்ட ஒரு மனிதர். இன்றில்லை என எண்ணும் போது எமது உள்ளம் நெக்குருகுகின்றது விதியை வெல்ல முடியாது ஆதலினால் அன்னாரின் ஆத்மா சாந்திக்காய்ப் பிரார்த்திப்போம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*


M. A. முருகதாசன் B.A. (Hose)
(ஆசிரியர்)
யா/ தொல்புரம் அ.மி.த.க. பாடசாலை

**தாசன் கல்வி நிறுவனம்**
**பண்ணாகம்,**
**சுழிபுரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூப்பிட யார் இருக்கார்



அப்பாவுக்கு அப்பா மாதிரியும் எனது கூடப்பிறந்த சகோதரன் மாதிரியும் பல புத்திமதிகள் சொல்லி என்னை ஆளாக்கிய அன்புத் தெய்வத்தை என்னால் மறக்க முடியாது. வீட்டை ஒருமுறை வராது போனாலும் தேடிவரும் என் அன்பு அண்ணாவை நான் என்னென்று மறப்பது. குடித்தாலும் வெறித்தாலும் எனக்கு இரண்டு அடி போட்டு என்னைத் திருத்தி ஆளாக்கிய தவராசா அண்ணா! என்னை ஐக்கிய நாணய சங்கத்தில் சேர்த்துவிட்டு மற்றவர் போல் நீ நல்லாய் இருக்க வேண்டும் என அறிவுரை கூறுவார் ஒவ்வொரு வருடப்பிறப்பு, தீபாவளி என்றால் எனக்கு சரம், சேட்டு, காசு 1000மும் தருவார் இப்படிபட்ட கடவுளை நான் என்னவென்று மறப்பது என் கண்கண்ட கோயிலை நான் இனி எப்போது காண்பேன்.


இப்படிக்கு
**S. S. மணியம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விஜயநகர பேரரசு

## சங்கமர் மரபு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாமினி சுல்தான்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டில்லி சுல்தான் பேரசை ஆண்ட வம்ச பரம்பரைகள்

## அடிமை வம்சம்



- குதுபுதீன் அய்பெக்
  - II ஆராம்ஷா
  - மகளின் கணவன் II இல் தூத்மிஷ்
    - IV ருத்நுதின்
    - மகள் ரஸியா
    - VI பஹ்சாம்
    - நஸீருதின் மகமூத்
    - பால்பன்
      - முகம்மது
        - X முயிஸீதீன் கைக்கோபாத்
          - XI கயூமர்
      - புக்ராகான்

## கில்ஜிகள் வம்சம்

- கயிம்கான்
  - I ஜலாலுதீன் (1290 – 1296)
    - II ருக்துதீன் இப்ராஹிம்
  - மஸுத் (ஷிஹாபுதீன்)
    - II அலாவுதீன் (1296 – 1316)
      - கிஸர்கான்
      - IV ஹிஹாவுதீன் உமர்
      - V இத்புதீன்முபாரக் (1321 இறந்தான்)
      - VI நாஜீருதீன்குஸ்ரு (1321-8-22 இறப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துக்ளக்குகள் வம்சம்



- I கியாஸ்தீன்துக்ளக்
  - II முகம்மதுதுக்ளக்
- சிபாஸலார்
  - III பிருஸ்ஷாதுக்ளக்
    - பாத்கான்
      - IV கியாஸ்தீன் துக்ளக்
      - VIII நுஸ்ரத்ஷா
    - ஸாபர்கான்
      - V அபுபக்கர்
    - VI நஸீருதீன் முகம்மதுஷா
      - VII அலாவுதீன் ஸிகந்தர்
      - IX முமம்மூதுஷா

# சைய்யதுகள் வம்சம்


- I கிஸர்கான் (1414 – 1421)
  - II முயிஸுதீன்முபாரக்
  - பரீத்கான்
    - III முகம்மதுஷா
      - IV அலாவுதீன் ஆலம்ஷா

# லோடிகள் வம்சம்

- I பலூால் லோடி
  - பார்பக்ஷா
  - II நிஜாம்கான் ஜிகந்தர் லோடி
  - ஆலம் லோடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொகலாயர் பேரரசு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அக்பர் ஆட்சி தொடங்கிய காலத்து இந்தியா (கி.பி. 1561)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர்

❖ **பிள்ளையார் சுழி குறிப்பது**

பிள்ளையார் சுழி என்பது "உ" என்ற குறியாகும் "O" வட்டம் என்ற ஒன்றும் "______" நீட்டம் என்ற உண்டும் ஒருங்கே அமைந்துள்ளது. வட்டம் விந்து என்றும் நீட்டம் நாதம் என்றும் பொருள்படும் இவை இரண்டும் முத்திக்கு வித்தாகும்.

❖ **விநாயகரின் பிறப்பு பற்றி கூறும் நூல்கள்**

| | |
|---|---|
| விநாயகர் புராணம் | கந்தபுராணம் |
| சிவபுராணம் | காஞ்சிப்புராணம் |
| மச்சபுராணம் | |

❖ **விநாயக திருவுருவின் அங்கங்கள் குறிக்கும் தேவர்கள்**

நாபி - பரமன்
முகம் - திருமால்
முக்கண் - சிவபெருமான்
இடப்பக்கம் - சக்தி
வலப்பக்கம் - சூரியன்

❖ **விநாயகரின் ஐந்து கரங்களில் எவை "சிவாயநம" வைக் குறிக்கும்**

சி - அங்குசம் தாங்கிய வலகு கரம்
வா - பாசம் பற்றிய இடது கரம்
ய - தந்தம் ஏந்திய வலது கரம்
ந - மோதகம் ஏந்திய இடதுகரம்
ம - துதிக்கை

❖ **விநாயகரின் முக்கிய ஆறு மூர்த்தங்கள்**

| | |
|---|---|
| சந்தான கணபதி | ஹரித்ரா கணபதி |
| சுவர்ண கணபதி | மகா கணபதி |
| நவநீத கணபதி | உச்சிஷ்ட கணபதி |

❖ **ஐங்கரனின் ஐந்து கரங்கள் உணர்த்தும் தத்துவம்**

ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதனம் என்னும் ஐந்து மலங்களை ஒழிப்பவர்.
படைத்தல், காத்தல், அழித்தல், மறைதல், அருளல் எனும் ஐந்தொழிலைச் செய்பவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ❖ விநாயக பூசைக்குரிய 21 மலர்கள்

| | | | |
|---|---|---|---|
| மாசிப்பச்சை | கத்தரி | மருதி | சிறுசெண்பகம் |
| கையாந்தவரை | வன்னி | விட்ணுகரந்தை | செந்தாரி |
| வில்வம் | அலரி | மாதுளை | பாதிரி |
| ஊமத்தை | காட்டுசுத்தி | தேவதாரு | |
| நொச்சி | அறுகு | மரு | |
| நாயுருவி | எருக்கு | நெல்லி | |

### ❖ விநாயகரை நினைத்து இருக்கும் விரதங்கள்

| | |
|---|---|
| வெள்ளிக்கிழமை | கார்த்திகை மாத சதுர்த்தி |
| ஒவ்வொரு மாத சதுர்த்தி | ஆவணி மாத சதுர்த்தி |
| பிள்ளையார் கதை | |

### ❖ விநாயகரின் மூன்று சக்திகள்

| | | |
|---|---|---|
| சித்தி | புத்தி | வல்லபை |

### ❖ விநாயக உருவம் அமைக்க உதவும் பொருட்கள்

| | | |
|---|---|---|
| கல் | யானைத்தந்தம் | பஞ்சலோகம் |
| மண் | அத்திமரம் | வொள்ளெருக்கு |
| பவளம் | | |

### ❖ விநாயகருக்கு பிடித்த படையல் பொருட்கள்

| | | |
|---|---|---|
| வாழை | கனிவகைகள் | மோதகம் |
| கடலை | மா | தேங்காய் |
| எள்ளுருண்டை | பலா | கருப்பங்கட்டி |
| அவல் | | |

### ❖ விநாயகபெருமான் மிகவும் விரும்பி ஏற்கும் பூக்கள்

| | | | |
|---|---|---|---|
| எருக்கம்பூ | தாமரைப்பூ | செம்பருத்திபூ | ரோஜாப்பூ |

### ❖ விநாயகரின் திருநாமங்கள்

| | | |
|---|---|---|
| கஜானைன் | சுக்ரபூஜ்யன் | லம்போதரன் |
| விக்னராஜன் | பாலகப்பிரியன் | மகேஸ்வராமோதகரன் |
| ஸித்திப்ரகன் | பிரமச்சாரி | ஓங்காரரூபன் |
| கணபதி | அச்வத்தமூலவாசன் | மோதக பக்ஷகன் |
| பார்வதிதனையன் | வீரகணபதி | மூஷிகவாஹரன் |
| ஹேரம்பன் | ஞானகணபதி | வித்தியாராஜன் |
| ஏகதந்தன் | ஸிந்தசேவிதன் | அக்ஞானநாசகன் |
| வரப்பிரதன் | கிரந்தகிருத் | பித்ருபக்திமான் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபெருமான்

❖ **ஐந்தொழில்களை இயற்றும் மூர்த்தங்களையும் அவற்றுக்குரிய சக்திகளும்**

| **தொழில்** | **மூர்த்தம்** | **சக்தி** |
|---|---|---|
| படைத்தல் | பிரமா | பிராமி |
| காத்தல் | விஷ்ணு | நாராயணி |
| அழித்தல் | உருத்திரன் | உமை |
| மறைத்தல் | மகேசுவரன் | மகேசுவரி |
| அருளல் | சதாசிவன் | மனோன்மணி |

❖ **ஆன்மா முத்தி பெறுதல்**

| **முத்திதலம்** | **பெறும் முத்தி** |
|---|---|
| திருவாரூர் | பிறக்கமுத்தி |
| காசி | இறக்கமுத்தி |
| திருவண்ணாமலை | நினைக்கமுத்தி |
| சிதம்பரம் | தரிசிக்கமுத்தி |
| வேதாரண்யம் | தீர்த்தமாடமுத்தி |
| ஆலவாய் (மதுரை) | கூறமுத்தி |
| அவிநாசி | கேட்கமுத்தி |
| காஞ்சிபுரம் | வாழமுத்தி |

❖ **மகா சிவராத்திரி விரதத்தின் 4 சாம நிகழ்வுகள்**

| சாமம் | அபிஷேகம் | அலங்காரம் | அர்ச்சனை | நிவேதனம் |
|---|---|---|---|---|
| 1 | பஞ்சகொவ்யம், அகில் | வில்வம் | தாமரை | பொங்கல் |
| 2 | பஞ்சாமிர்தம், சந்தனம் | தாமரை | துளசி | பாயாசம் |
| 3 | தேன், பச்சை கற்பூரம் | ஜாதிமல்லிகை | 3 இதழ் கொண்ட விலவம் | எள்ளன்னம் |
| 4 | கருப்பஞ்சாறு, குங்கும்பூ | நந்தியாவட்டை | நீலோத்பலம் | சுத்தன்னம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ❖ இறைவனின் அட்டவீரட்டான தலங்கள்

| தலம் | இறைவன் பெயர் | வீரச்செயல் |
|---|---|---|
| திருவதிகை | வீரட்டானேசுவர் | திரிபுர தகனஞ்செய்தமை |
| பறியயலூார் | வீரட்டேசர் | தக்கன் தலை அறுத்து யாகம் அழித்தமை |
| திருக்குறுக்கை | வீரட்டேசுவரர் | காமனை எரித்தமை |
| வழுவூர் | ஜலந்தாரி தக்ககாரி | யானைவடிவ கயாசுரனை அழித்தமை |
| கண்டியூர் | வீரட்டேசர் | பிரமனுடைய தலையைக் கிளியமை |
| திருக்கடவூர் | காலசம்காரமூர்த்தி | யமனை காலால் உதைத்தமை |
| கோவலூார் | வீரட்டநாதர் | அந்தகாசுரனை அழித்தமை |
| விற்குடி | வீரட்டநாதர் | சலந்தராசுரனை அழித்தமை |

## ❖ சிவன் நிகழ்த்திய முக்கிய தாண்டவங்கள்

| தாண்டவம் | இடம் | சபை | தத்துவம் |
|---|---|---|---|
| காளி தாண்டவம் | திருநெல்வேலி | தாமிரசபை | படைத்தல் |
| கௌரி தாண்டவம் | திருப்புத்தூர் | சிற்சபை | காத்தல் |
| சந்தியா தாண்டவம் | மதுரை | வெள்ளிசபை | காத்தல் |
| காங்கார தாண்டவம் | பிரபஞ்சம் | நடுச்சாமம் | அழித்தல் |
| திரிபுர தாண்டவம் | திருக்குற்றாலம் | சித்திரசபை | மறைத்தல் |
| ஊர்த் தாண்டவம் | திருவாலங்காடு | இரத்திசபை | அருளல் |
| ஆனந்த தாண்டவம் | சிதம்பரம் | பொற்சபை | பஞ்ச கிருத்தியம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன்

❖ **முருகனின் பன்னிரு திருக்கரங்கள் உணர்த்தும் தத்துவம்**

முதல் சோடித் திருக்கரங்கள் - காத்தல்
இரண்டாம் சோடித் திருக்கரங்கள் - மறைத்தல்
மூன்றாம் சோடித் திருக்கரங்கள் - அழித்தல்
நான்காம் சோடித் திருக்கரங்கள் - அருளல்
ஐந்தாம் சோடித் திருக்கரங்கள்- வேள்வி
ஆறாம் சோடித் திருக்கரங்கள் - படைத்தல்

❖ **முருகனின் ஆறுபடை வீடுகள்**

திருப்பரங்குன்றம் - தெய்வானை மணம் புரிதல்
பழனி (திருவாவினைகுடி) - பழனி ஆண்டியாக நிற்றல்
சுவாமி மலை (திருவேரகம்) - சிவனுக்கு பிரணப் பொருளை உணர்த்தியமை
திருத்தணிகை (குன்றுதோறாடல்) - வள்ளியம்மை மணம் புரிதல்
பழுதிர்சோலை (அழகர் மலை) - வள்ளி தெய்வான சமேதராக நிற்றல்
திருச்செந்தூர் (அலைவாய்) - சுரசங்காரம் புரிதல்

❖ **முருகப்பெருமானின் மந்திரம்**

சரவணபவ

❖ **முருகன், வள்ளி, தெய்வயானை குறித்து நிற்கும் தத்துவம்**

வள்ளி - இம்மை முருகன் - அம்மை
தெய்வயானை - மறுமை

❖ **முருகனின் ஆறுமுகங்களும் குறிக்கும் இறைவனின் குணங்கள்**

| | | |
|---|---|---|
| முற்றுணர்வு | வரம்பிவின்பம் | இறய்கையுணர்வு |
| தன்வயமுடைமை | பேரருள் | வரம்பில் ஆற்றல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **முருகனின் திருநாமங்கள்**

| | | |
|---|---|---|
| கார்த்திகேயன் | நாதவிற்துகலாதீகன் | வள்ளிமணாளன் |
| சுப்பிரமணியன் | ஞானபண்டிதன் | சேனாபதி |
| காங்கேயன் | தண்டபாணி | ஞானசக்திரன் |
| வேலவன் | கௌரீதநயன் | தாரகாந்தர் |
| சரவணபவன் | சசிவாகனை | தேவசேனாதிபதி |
| கடம்பன் | ஆறுமுகன் | |
| கந்தன் | குமாரன் | |
| செவ்வேள் | பிரமசாக்தன் | |

❖ **முருகனின் மூன்று சக்திகள்**

ஞானசக்தி - வேல்
இச்சா சக்தி - வள்ளிநாயகி
கிரியாசக்தி - தெய்வயானை

❖ **முருகன் தொடர்பான பராயண நூல்கள்**

| | |
|---|---|
| திருமுகாற்றுப்படை | - நக்கீரர் |
| கந்தர்கலிவெண்பா | - குமரகுருபரர் |
| சிதம்பர மும்மணிக்கோவை | - குமரகுருபரர் |
| கந்தசஷ்டி கவசம் | - தேவராஜசுவாமி |
| சண்முக கவசம் | - குமரகுருபரர் |
| முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் | - குமரகுருபரர் |
| பிள்ளைத்தமிழ் | - பாம்பன் அடிகள் |
| கந்தரநுபூதி | - அருணகிரிநாதர் |
| திருப்புகழ் | - அருணகிரிநாதர் |

❖ **முருகனின் வாகனங்கள்**

யானை மயில் எருமைக்கடா

❖ **முருகனுக்குரிய விரதங்கள்**

வெள்ளிக்கிழமை, கார்த்திகை விரதம், கந்தசஷ்டி விரதம்

❖ **முருகனால் அருருரை வழங்கப்பட்டவர்கள்**

சிவபெருமான், அருணகிரிநாதர், அகத்தியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மன்

- **உமையின் மூர்த்தங்களில் உக்கிர வடிவம்**

துர்க்கை மகிஷாமர்த்தனி

- **லக்சுமி வாசகம் செய்யும் மரச்செடிகள்**

வில்வமரம், நெல்லிமரம், துளசி, மஞ்சள் செடி

- **சிறி தேவிக்கு நிவேத்திக்கப்படும் நிவேதனங்களும் அவற்றின் பயன்கள்**

| கிழமை | நிவேதனம் | பயன்கள் |
|---|---|---|
| ஞாயிறு | சக்கரைப்பொங்கல் | நோய் அகலும் |
| திங்கள் | தேன், சர்க்கரை, பழம், பால்சாதம் | ஐஸ்வரியம், பதவி வளரும் |
| செவ்வாய் | பழம், தேன், சித்திரான்மை வெண்பொங்கல் | கிரகபீடை நீங்கும் |
| புதன் | தயிர்சாதம் | புத்திரபாக்கியம் உண்டாகும் |
| வியாழன் | பால், பாயசம் | புத்திவளர்ச்சி, பரீட்சை சித்தி |
| வெள்ளி | தேங்காய் பாகு | சித்தி |
| சனி | எள் அன்மை புளியோதரை தேங்காய்சாதம் | கவலை கஷ்டங்கள் நீங்கும் |

- **சக்திக்குரிய விரதங்கள்**

நவராத்திரி, வரலட்சுமி, வசந்த நவராத்திரி, ஆடிப்பூரம், உமா சுக்கிர விரதம், மாங்கல்ய விரதம், தைத்திங்கள் விரதம்

- **உமையின் வேறு நாமங்கள்**

குமாரி, கரளா, கௌஸிகர், கபாலி, காளி, வித்தியவாசினி சண்டீ, மகாகாளி, கல்யாணி, உமா, அஜா, மகேஸ்வரி, அன்னபூர்ணா, பவானீ, திரிபுர, சுந்தரி, மஹாவித்யா, தியானகம்யா

- **தேவிக்குரிய தீபம் ஏற்றுவதற்கு உகந்த ஐவகை எண்ணைகள்**

நெய், தேங்காய்எண்ணெய், வேப்பெண்ணெய், விளக்கெண்ணெய், இலுப்பைஎண்ணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஷ்ணு

- **மகாவிஷ்ணுவின் மூன்று வகைத் தோற்றம்**
  அவதாரம் ஆவேசம் அமிசம்
- **மகாவிஷ்ணுவின் நான்கு திருக்கரங்களிலும் இருப்பன**
  தருமச்சக்கரம் சங்கு தாமரை கதாயுதம்
- **பன்னிரு ஆழ்வார்களும் பிரபந்தங்களும்**

| ஆழ்வார்கள் | பிரபந்தங்கள் |
|---|---|
| பெரியாழ்வார் | திருப்பல்லாண்டு, திருமொழி |
| ஆண்டாள் | திருப்பாவை, நாச்சியார் திருமொழி |
| குரசேகர ஆழ்வார் | பெருமாள் திருமொழி |
| திருமழிசையாழ்வார் | திருச்சந்த விருத்தம், நான்முகன் திருவந்தாதி |
| தொண்டரடிபொடியாழ்வார் | திருமலை திருப்பள்ளியெழுச்சி |
| திருப்பாணாழ்வார் | அமலனாதிபிரான் |
| மதுரகவியாழ்வார் | கண்ணினுள் சிவத்தாம்பு |
| திருமங்கையாழ்வார் | பெரிய திருமொழி திருக்கநற்தாண்டகம் திருநெடுந்தாண்டகம், திருபெழுக் கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் |
| பொய்கையாழ்வார் | முதல் திருவந்தாதி |
| பூதத்தாழ்வார் | இரண்டாந் திருவந்தாதி |
| பேயாழ்வார் | மூன்டாந் திருவந்தாதி |
| நம்மாழ்வார் | திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியன்

❖ **சூரியன் வாசம் செய்யும் மண்டலம்**

சௌர மண்டலம்

❖ **சூரியனின் தேரை இழுக்கும் குதிரைகள் ஏழும்**

காயத்திரி உஷ்ணிக் அனுஷ்குப் பிருகதி
பங்தீ திருஷ்டுப் ஜயதீ
(விஞ்ஞானிகள் ஏழு வர்ணம் என்பர்)

❖ **சூரியனுக்குரிய மூன்று சக்திகள்**

உஷா சூரியா விருஷாகபாயி

❖ **சூரியனுக்குரி வழிபாட்டுக்கு சிறந்த நாள்**

ஞாயிற்றுக்கிழமை

❖ **சூரியனை வணங்குவதனால் ஏற்படும் பயன்கள்**

கண் சம்பந்தமான நோய்கள் தீரும்
மனதில் உள்ள கவலைகள் தீரும்
இதயக் கோளாறு நீங்கும்
பகைவர்கள் அழிக்கப்படுவார்கள்
மனதில், உடலில் உற்சாகம் தோன்றும்
உடல் வலிகள் தீங்கும்
விரோதங்களை ஒழிப்பான்

❖ **சூரிய தேவனின் மனைவிமார்**

சஞ்சிகை - இவள் துவஷ்டா என்பவனுடைய மகள்
சாயதேவி - இவள் சஞ்சிகையால் உருவாக்கப்பட்டவள்

❖ **சூரிய தேவனின் பிள்ளைகள்**

சஞ்சிகைக்கு - மனு, யமன், யமுனை, அஸ்வினி
சாயதேவிக்கு - சாவர்ணிமனு, சனிபகவான், பத்திரை
க்குஷிணிக்கு - பிருகு மகரிஷி, வால்மீகி
ஊர்வசிக்கு - அகத்தியர், வசிஷ்ட மகரிஷி
வானரப் பெண்ணுக்கு - சுக்ரீவன்
குந்திக்கு - கர்ணன்

❖ **சூரிய வழிபாடு பற்றி கூறும் நூல்கள்**

சூரிய புராணம் சூரிய தந்திரம் சூரிய ஆகமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அம்சங்கள்

❖ **பிறப்புக்களின் வகைகள்**

1. தேவர் 2. மனிதர் 3. விலங்கு
4. பறவை 5. ஊர்வன 6. நீர்வாழ்வன
7. தாவரம்

❖ **பஞ்சமா பாதங்கள்**

கொலை களவு பொய் காமம் கள்

❖ **பஞ்ச பூதங்கள் (தலங்கள்)**

மண் - பிரமா - பிருதிவி - காஞ்சிபுரம்
நீர் - விஷ்ணு - அப்பு - திருவாணைக்கா
நெருப்பு - உருத்திரன் - தேயு - திருவண்ணாமலை
காற்று - மகேஸ்வரன் - வாயு - திருக்காளத்தி
ஆகாயம் - சதாசிவன் - ஆகாயம் - சிதம்பரம்

❖ **யுகங்களின் வகைகள்**

கிரேதாயுகம் திரேதாயுகம் துவாபரயுகம் கலியுகம்

❖ **இந்துக்களின் திருமண சடங்கில் "பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க" என வாழ்த்துகின்றார்கள் அவ்வாறான பதினாறு வருமாறு**

01) நுகர்ச்சி – பெற்றதை அனுபவிக்கும் அறிவு
02) அழகு – மனதில் குடிகொள்ளும் நல்ல எண்ணங் களால் முகத்தில் வெளிப்படும் கவர்ச்சி
03) நன்மக்கள் – பெற்ற குழந்தைகளை சீராக வளர்க்கும் ஆற்றல்.
04) நீண்ட ஆயுள் – ஆரோக்கிய வாழ்வு நடத்த உடல் நலம் பேணும் பக்குவம்.
05) வலி – உடலுக்கும், உள்ளத்துக்கும் வலு தேடிக்கொள்ளும் ஆற்றல்.
06) துணிவு – அஞ்சியஞ்சிச் சாவையும் கோழைத்தனத் தையும் அகற்றல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07) பொறுமை – சகிப்புத் தன்மை.

08) அறிவு – எப்பொருள் யார், யார் வாய் கேட்பினும் அப்பொருளின் மெய்ப்பொருள் காணும் ஆற்றல்.

09) நல்லூழ் – ஆற்றல் வேண்டிய தெய்வக் கடன்களை ஆற்றி ஊழ் வினையை நல்லதாக்கிக் கொள்ளும் பண்பு.

10) கல்வி – தேவையான அறிவை தேவைப்படும் போது கற்கும் ஊக்கம்.

11) நோயின்மை – அளவறிந்து உண்டும், நோய்க்கிடங் கொடாமலும் வாழும் நேர்த்தி.

12) பொன் – வாழ்க்கையை நடத்தத் தேவையான செல்வம் ஈட்டும் உற்சாகம்.

13) இளமை – நற்பழக்கத்தினால் நல்ல காத்திரமான உடலைத் தளராமல் பேணும் திறமை.

14) நெல் – சிக்கனமாக வாழ்ந்து வாழ்க்கைக்கு தேவையான நெல்வளம் தரும் பூமியைத் தேடிக்கொள்ளும் ஆற்றல்.

15) வெற்றி – எடுத்த காரியத்தைத் திறமையுடன் கையாண்டு இறுதியில் வெற்றி பெறக் கூடிய திறன்.

16) புகழ் – மற்றவர்கள் உதாரணமாகக் கொள்ளக் கூடிய முறையில் வாழ்ந்து புகழ் பெறும் பண்பு.

❖ **நவரத்தினங்கள்**

மாணிக்கம், முத்து, புஷ்பராகம், கோமேதகம், வைரம், மரகதம், வைடூரியம், நீலம், பவளம்

❖ **இயற்கையின் ஆறு பருவங்கள்**

இளவேனில்காலம், முதுவேனில் காலம், கார்காலம், இலையுதிர் காலம், முன்பனிக்காலம், பின்பனிகாலம்

❖ **அஷ்டமகா நாகங்கள்**

அனந்தன், வாசுகி, கார்க்கோடன், சங்கபாலன், குளிகன், பத்மன், மகா பத்மன், தர்ச்சகன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **பஞ்சமா காவியங்கள்**

இரகுவமிசம் குமார சம்பவம் கிராதார் ஜுனீயம்
சிசுபாலவதம் நைஷதீய சரிதம்

❖ **இந்துமதம் கடாவம் அட்ட மூர்த்தங்கள்**

நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா

❖ **வேள்விகளின் வகைகள்**

தேவவேள்வி, பூதவேள்வி, பிரம்மவேள்வி, மானுடவேள்வி, பிதுர்வேள்வி

❖ **பஞ்ச உலோகங்கள்**

பொன், வெள்ளி, செப்பு, இரும்பு, ஈயம்

❖ **பஞ்ச வில்வங்கள்**

வில்வம், மாவிலங்கை, விளாத்தி, நொச்சி, கிளுவை

❖ **சப்த கன்னிகைகள்**

அகல்யை தாரை சீதை திரௌபதி
மண்டோதரி அருந்ததி நளாயினி

❖ **சிரஞ்சீவிகள் ஏழு பேரையும் குறிப்பிடுக**

ஆஞ்சிநேயர், வீடணன், பரசுராமர், கிருபர், மகாபலி, வியசர், அசுவத்தாமர்

❖ **மனித உடலின் பஞ்ச கோசங்கள்**

ஆனந்தமய, அன்னமய, விஞ்ஞானமய, மனோமய, பிராணமய

❖ **இந்து தெய்வங்களும் வாசகம் செய்யும் மலைகளும்**

பிரம்மா – சுமேரு மலை
விஷ்ணு – வைகுண்ட மலை
சிவன் – கைலாய மலை
இந்திரன் – சுவர்க்க மலை
விநாயகர் – ஆனந்த மலை
ஐயப்பன் – சபரி மலை
பார்வதி – இமய மலை
வள்ளி – வள்ளி மலை

❖ **பசுவின் உடல் உறுப்பும் வாசம் செய்யும் தேவர்கள்**

பசுவின் வலது கொம்பு – கங்கை
பசுவின் இடது கொம்பு – யமுனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுவின் மத்திய பகுதி — சரஸ்வதி
பசுவின் முன் கால் — பிரம்மா
பசுவின் பின் கால் — உருத்திரன்
பசுவின் குளம்புகள் — தேவர்கள்
பசுவின் மடி — சமுத்திர தேவர்கள்

❖ **அஷ்ட திக்குப் பாலகர்களும் வாகனம், ஆயுதங்களும்**

| பாலகர் | திசை | வாகனம் | நகரம் | ஆயுதம் |
|---|---|---|---|---|
| இந்திரன் | கிழக்கு | ஐராவதயானை | அமராவதி | வச்சிராயுதம் |
| அக்கினி | தென்கிழக்கு | ஆடு | தேவசேனாபதி | சக்தி |
| யமன் | தெற்கு | எருமைக்கடா | சம்யமணி | தண்டம், பாசம், குடிரம் |
| நிருத்தி | தெனமேற்கு | நர | கிருணாவதி | குந்தம், வாள் |
| வருணன் | மேற்கு | மகரம் | சுத்தவததி | பாசம் |
| வாயு | வடமேற்கு | மான் | கெந்தவதி | துவசம் |
| குபேரன் | வடக்கு | நர | மகோதயபுரி | குதிரை, கிளி |
| ஈசானன் | வடகிழக்கு | இடபம் | எசோவதி | திரிசூலம் |

❖ **ஞானேந்திரியங்கள்**

மெய் வாய் கண் மூக்கு செவி

❖ **கன் மேந்திரியங்கள்**

வாக்கு பாதம் பாணி பாயு உபத்தம்

❖ **தண் மாத்திரைகள்**

சத்தம் பரிசம் ரூபம் இரசம் கந்தம்

❖ **அந்தக் காரணங்கள்**

மனம் புத்தி சித்தம் அகங்காரம்

❖ **ஆணவத்தின் எண் குணங்கள்**

விகற்பம் — தன்னை விடப்பிறர் ஒவ்வாரெனல்
கற்பம் — பிடித்ததைப் பிடித்திருத்தல்
கிரோதம் — கோபங்கொண்டு நினைத்தல்
மோகம் — நன்றிற்கு ஆசைப்படல்
கொலை — உயிர்களைக் கொல்லுதல்
அஞர் — சத்தமும் துக்கப்படுதல்
மதம் — அகங்காரப் மேலிடல்
நகை — சிரித்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய குரவர்கள்

| விடயம் | திருஞான சம்பந்தமூர்த்தி | திருநாவுக்கரசு நாயனார் | சுந்தரமூர்த்தி நாயனார் | மாணிக்கவாசக சுவாமிகள் |
|---|---|---|---|---|
| நாடு | சோழ நாடு | திருமுறைப்பாடி நாடு | திருமுனைப்பாடி நாடு | பாண்டி நாடு |
| ஊர் | சீர்காழி | திருவாரூர் | திருநாவலூர் | திருவாதவூர் |
| குலம் | கவுணியர் கோத்திரம் பிராமணர் | வேளாளர் | பிராமணர் | ஆமாந்தியப் பிராமணர் |
| தந்தை | சிவபாதவிருதயர் | புகழனார் | சடையனார் | சம்புபாதசிரியர் |
| தாய் | பகவதியார் | மாதினியார் | இசைஞானியர் | சிவஞானவதியார் |
| காலம் | கி.பி. 7ம் நூற்றாண்டு | கி. பி. 7ம் நூற்றாண்டு | கி. பி. 9ம் நூற்றாண்டு | சி. பி. 989ம் நூற்றாண்டு |
| இறைவனை புகழ்ந்த தமிழ் | கொஞ்சு தமிழ் | கொஞ்சு தமிழ் | விஞ்சு தமிழ் | ஞானத்தமிழ் |
| முதற் பாடிய பதிகம் | "தோடுடைய செவியன்" | "கூற்றாயின வாராய்" | "பித்தாப் பிறைசூடி" | "சிவபுராணம் நமசிவாயவாழ்க" |
| முதல் அருள் பெற்ற தலம் | திருப்பிரமபுரம் | திருவதிகை வீரட்டானம் | திருவெண்ணெய் | திருப்பெருந் துறை |
| பாடிய பதிகத் தொகை | 16000 | 49000 | 38000 | - |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| இன்றுள்ள பதிகத் தொகை | 384 | 312 | 100 | 51 |
| இன்றுள்ள பாடல்கள் | 4159 | 3066 | 1036 | திருவாசகம் 656 திருக்கோவை 400 |
| திருமுறை வகுப்பு | 1ம், 2ம். 3ம் திருமுறைகள் | 4ம், 5ம், 6ம் திருமுறைகள் | 7ம் திருமுறை | 8ம் திருமுறை |
| இறுதிப் பதிகம் | "காதலாகி கசிந்து" | "எண்ணுகேன் என்சொல்லி" | "தானெனை முன்" | "கோவையார்" |
| நெறி | கிரியை | சரியை | யோகம் | ஞானம் |
| முத்தி | சாமீபம் | சாலோகம் | சாரூபம் | காயுச்சியம் |
| முத்தித் தலம் | திருப்பெருமண நல்லூர் | திருப்புகலூர் | திருவஞ்சைக் களம் | தில்லைச் சிற்றம்பலம் |
| முத்தி வயது | 16 | 81 | 18 | 32 |
| முத்தித் தினம் | வைகாசி மூலம் | சித்திரை சதயம் | ஆடிச் சுவாதி | ஆனி மகம் |
| மறு பெயர்கள் | ஆளுடைய பிள்ளையார், காழிவேந்தர், கவுணியர்கோன் திராவிடசிசு, சண்பயர் காவலன், சிவஞானக்கன், முத்தமிழ் விரகர், பரசமய கோளி வைசிகாமணி, பாலவாயர் | வாசீகர், ஆளுடைய அரசர், தாண்டக வேந்தர், உழவாரப் படையாளி, அப்பர், மருணீக்கியர், பெருவிரல்நாதர் தேசபிதா | நம்பியார், திருநாவலூர், ஆளுடையநம்பி, வன்றொண்டர், தம்பிரான், தோழர் சேரமான் தோழர், சிங்கையடியப்பன் திருத்தொண்டர் தொகையாளி, திருமணகோல பெருமான் | திருவாதவூரடிகள் ஆளுடைய அடிகள், சிவபாத்தியாய பாலன், மணிவாசகர், கோவைவேந்தர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிதத்துடன் சில நிமிடங்கள்

❖ **எண்கள்**

i. முழு எண்கள் {0, 1, 2, 3, 4, 5, ................}

ii. இயற்கை எண்கள் { 1, 2, 3, 4, 5, ................}

iii. எண்ணும் எண்கள் {1, 2, 3, 4, 5, 6, ................}

iv. நிறை எண்கள் {... 4, -3, -2, -1, 0, 1, 2, 3 ....}

v. முதன்மை எண்கள் {2, 3, 5, 7, 11, ................}

vi. சேர்த்தி எண்கள் {4, 6, 8, 9, 10, 12, ..............}

vii. சதுர எண்கள் {1, 4, 9, 16, 25, ................}


viii. முக்கோண எண்கள் {1, 3, 6, 10, 15, ................}

ix. மீளும் தசம எண்கள் { 1.444 ....., 2.121212....., 4.324 324 .....}


x. விகதமுறா எண்கள் {π, √2, √3, √5, √6 .....}

❖ **செங்கோண முக்கோணி ஒன்றின் செம்பக்கமல்லாத ஒரு பக்க நீளம் தரப்படுமிடத்து ஏனைய இருபக்க நீளங்களையும் காண்போம்.**

a) இரட்டை எண் $4 \rightarrow \left[\frac{4}{2}\right]^2 \rightarrow 4$ ; $+1 = 5$ ; $-1 = 3$





$6 \rightarrow \left[\frac{6}{2}\right]^2 \rightarrow 9$ ; $+1 = 10$ ; $-1 = 8$







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

b) ஒற்றை எண் $3 \rightarrow 3^2 \rightarrow 9$ ↗ 5, ↘ 4





$5 \rightarrow 5^2 \rightarrow 25$ ↗ 13, ↘ 12




❖ **பின்வரும் உருக்களிலுள்ள முக்கோணிகள், சதுரங்கள் எண்ணிக்கையைக் காண்போம்.**




$\frac{1 \times 2}{2} = 1$ $\frac{2 \times 3}{2} = 3$ $\frac{3 \times 4}{2} = 6$ $\frac{4 \times 5}{2} = 10$




$1^2$ = 1

$1^2 + 2^2$ = 5

$1^2 + 2^2 + 3^2$ = 14

$1^2 + 2^2 + 3^2 + 4^2$ = 30

❖ **நேர்கோடுகள் ஒன்றையொன்று இடைவெட்டும் போது உண்டாகும் வெட்டுப்புள்ளிகளின் எண்ணிக்கை காண்போம்.**



$\frac{2 \times 1}{2} = 1$ $\frac{3 \times 2}{2} = 3$ $\frac{4 \times 3}{2} = 6$ $\frac{5 \times 4}{2} = 10$

π கோடுகள் இடைவெட்டின் $\eta \frac{(\eta - 1)}{2}$ புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ ஓர் எண்ணின் காரணிகளின் எண்ணிக்கையை காண்போம்.

| எண் | முதன்மைக் காரணிகள் பெருக்கம் | காரணிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 8 | $2 \times 2 \times 2 = 2^3$ | $3 + 1 = 4$ |
| 12 | $2 \times 2 \times 3 = 2^2 \times 3^1$ | $(2 + 1) \times (1+1) = 6$ |
| 20 | $2 \times 2 \times 5 = 2^2 \times 5^1$ | $(2 + 1) \times (1+ 1) = 6$ |
| 72 | $2 \times 2 \times 2 \times 3 \times 3 = 2^3 \times 3^2$ | $(3 + 1) \times (2 + 1) = 12$ |
| 180 | $2 \times 2 \times 3 \times 3 \times 5 = 2^2 \times 3^2 \times 5^1$ | $(2 + 1) \times (2 + 1) \times (1 + 1) = 18$ |

சுட்டியுடன் ஒன்றை கூட்டி பெருக்குவதன் மூலம்

❖ பூரண எண்:- (Perfect Number)

ஓர் எண்ணின் அவ்வெண் தவிர்ந்த ஏனைய காரணிகளை கூட்டும்போது அவ்வெண் பெறப்படின் அது பூரண எண் எனப்படும்.

*உதாரணம்:-* 1) 6 2) 28 3) 496
4) 8128 5) 33550336 6) 8589869056

❖ பஸ்கால் முக்கோணி

| பஸ்கால் முக்கோணி | (a+b) இன் விரிவில் குணங்களை பாங்கால் முக்கோணியுடன் ஒப்பிடுவோம் |
|---|---|
| 1 | $(a + b)^0 = 1$ |
| 1 1 | $(a + b) = a + b$ |
| 1 2 1 | $(a + b)^2 = a^2 + 2ab + b^2$ |
| 1 3 3 1 | $(a + b)^3 = a^3 + 3a^2b + 3ab^2 + b^3$ |
| 1 4 6 4 1 | $(a +b)^4 = a^4 + 4a^3b+ba^2b^2 +4ab^3+ b^4$ |
| 1 5 10 10 5 1 | $(a+b)^5 = a^5+5a^4b + 10a^3b^2 + 10a^2b^3 + 5ab^4 + b^5$ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ பஸ்கால் முக்காணியில் வேறு சில கோலங்கள்

| | | |
|---|---|---|
| 1 | = 1 = | $2^0$ |
| 1 1 | = 2 = | $2^1$ |
| 1 2 1 | = 4 = | $2^2$ |
| 1 3 3 1 | = 8 = | $2^3$ |
| 1 4 6 4 1 | = 16 = | $2^4$ |
| 1 5 10 10 5 1 | = 32 = | $2^5$ |
| A B | | C |

A = முக்கோண எண்கள்
B = எண்ணும் எண்கள்
C = 2 இன் வலுக்கள்

❖ ஒரு பின்னத்தை தசமமாக மாற்றும் போது அது மீளும் தசமமாக அல்லது முடிவுறு தசமமா என அறிவதற்கு

i) பின்னத்தை எளிய பின்னமாக மாற்ற வேண்டும்.

ii) பகுதி எண் 2 அல்லது 5 இன் வலுவாக உள்ளதா என பார்க்க வேண்டும்.

பகுதி எண் 2 அல்லது 5 இன் வலுவாக இருந்தால் மட்டும் அது முடிவுறு தசமமாக இருக்கும் மற்றைய பின்னங்கள் மீளும் தசமமாக காணப்படும்.

***உதாரணம்:-***

1) $\frac{3}{10} = \frac{3}{2 \times 5}$ முடிவுறு தசமம்

2) $\frac{1}{30} = \frac{1}{2 \times 3 \times 5}$ மீளும் தசமம்

